Registered as a News paper in Ceylon

வி சதலை ம்10

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணுடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழபபாணம்.

ஈழநாடு
EELA NADU

போன் 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண் 49

மலர் 4 | யாழ்ப்பாணம் | சுபகிருது | தை 3ஆம் நாள் | ஷஃபான் பிறை19 | (16-1-63) | புதன்கிழமை | இதழ் 335

# பிரதமர் திரும்பினுர்

## விமான நிலையத்தில் கவர்னர் ஜெனரல் வரவேற்ருர்



பிரதமர் சிறிமாவோ

கொழும்பு, செவ்வாய்

இந்திய-சீன எல்லைப்பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்ப்பதற்கு இருநாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேசுவதற்கு வழிகாணுமுகமாக இருநாட்டுப் பிரதமர்களையும் சந்தித்துப் பேசி தமது சமாதானத்தூதில் ஓரளவு வெற்றியும் கண்ட இலங்கைப் பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இன்றிரவு சுமார் 9 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கினுர். இலங்கையின் கவனர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ, மற்றும் மந்திரிகள் திருமதி பண்டாரநாயக்காவின் புதல்விகளிருவர் புதல்வர் அநுரா ஆகியோரும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் பொதுமக்கள் ஆகியோரும் விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்றனர்.

### டில்லியில்

கொழும்பு திரும்புமுகமாக இன்றுகாலை ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, புதுடில்லியிலிருந்து புறப்பட்டபோது பிரதமர் நேரு அவரை வழியனுப்பி வைத்தார். அதற்குமுன் முப்படை அணிவகுப்பு நடைபெற்றது. இருநாட்டு தேசியகீதங்களும் இசைக்கப்பட்டன. ஸ்ரீமதி பண்டாரநாயக்கா இப்போது பீகிங்குடன் பேச்சுவார்த்தைபற்றித் தொடர்புகொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கானு நீதிமந்திரி திரு. ஒபோரி ஆட்டா இன்று பிரதமர் நேருவைச் சந்தித்தார். அவர் புதுடில்லியிலிருந்து பீகிங் செல்கிறுர்.

### திபேத்தில் கட்டாய ராணுவப் பயிற்சி

தவாங்கில் சீனர்கள் இன்னும் இருந்துவருகிறுர்கள் என்றும் லடாக்கிலிருந்து அவர்கள் இன்னும் விலகிச் செல்லவில்லை என்றும் கூறப்படுகிறது. திபேத்தில் 14 வயது முதல் 42 வயதுவரை சகலருக்கும், சீனர்கள் கட்டாய ராணுவப் பயிற்சி அளிப்பதாக இந்திய பிரஸ்டிரஸ்ட் ஸ்தாபனம் அறிவிக்கிறது. தானே இயங்கும் ஆயுதங்களில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. தலாய்லாமாவின் அரண்மனையும் பஞ்சன்லாமாவின் கட்டிடங்களும் ராணுவத் தலைமைக்காரியாலயமாக மாற்றப்பட்டிருக்கிறதாம்.

### 10 லட்சம் ஊர்க்காவலர்

இந்தியாவில் 10 லட்சம் பேர் ஊர்காவற்படையில் திரட்டப்பட்டுவருகிறுர்கள். கேரளத்திலுள்ள 42 ஆயிரம் மாணவர்களில் 19 ஆயிரம் பேருக்கு கெடட்பயிற்சியளிக்கப்படுகிறது.

---

### இன்று

யாழ்ப்பாணம் வில்லூன்றி விநாயகர் ஆலய பூர்த்தி விழாவையொட்டி இன்று மணவாளக்கோல சகஸ்ரசங்காபிஷேகம் நடைபெறும்.

# கறுப்பு கொடிகளுடன் துக்கதினம்

## தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்ப்பிரதேசங்களில் கடைகளை அடைத்து கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு பெப்ரவரி மாதம் 4-ம் திகதியை இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் துக்கதினமாக அனுஷ்டிப்பதெனவும் கடந்த ஆண்டுகளிலும் பார்க்க இவ்வாண்டு இத்துக்க தினத்தை பெரியளவில் திறம்பட நடாத்துவதெனவும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வாலிபமுன்னணி முடிவு செய்துள்ளது.

தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் 9-வது வருடாந்தக் கூட்டம் பொங்கல் திருநாளன்று யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தலைமைவகித்தார்.

வருகிற ஏப்ரல் மாதத்தில் நடாத்துவதாக தமிழரசுக்கட்சியால் உத்தேசித்திருக்கும் நேரடி நடவடிக்கை தமிழ்ப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அதில் வாலிபர்கள் அதிகளவில் முழுமூச்சுடன் பங்குபெற வேண்டுமென்றும் இந்த வருடாந்தக் கூட்டத்தில் பேசிய பலரும் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக ரீதியில் விஜயஞ்செய்த அமைச்சருக்கு அமைதியான முறையில் கறுப்புக்கொடிகாட்டி எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள், எம். பி.க்கள் ஆகியோரை மிருகத்தனமாகப் பொலிஸார் தாக்கியதற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. உத்தியோக ரீதியில் தமிழ்ப்பிரதேசங்களுக்கு விஜயஞ்செய்யும் மந்திரிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பகிஷ்கரிப்பு இயக்கம் நடாத்துவதெனவும்தீர்மானிக்கப்பட்டது.

திருநெல்வேலி, நல்லூர் ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளை மூடுவதென்ற கல்வி அமைச்சரின் முடிவுக்குக் கண்டனம் தெரிவிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

### வாலிப முன்னணி மகாநாடு

தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டை பெப்ரவரி மாதம் 2-ம், 3-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதெனவும் இம்மகாநாட்டிற்கான ஏற்பாடுகளைச்செய்ய சமிதியிடம் பொறுப்பளிப்பதெனவும் வாலிப முன்னணி முடிவுசெய்திருக்கிறது. இம்மகாநாட்டில் பலமுக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருப்பதோடு பெப்ரவரி 4-ம் திகதியைத் துக்கதினமாக அனுஷ்டிப்பதற்கான பிரசாரம் நடாத்தவும துக்கதினத் தீர்மானமும் நிறைவேற்றப்படுமெனத் தெரிகிறது.

புதுவருட நிர்வாகிகள் தேர்தலின்போது தலைவராக திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும், இணைக்காரியதரிசிகளாக திரு. எம்.ஆலாலசுந்தரம் திரு. சோ. சிவரத்தினம் ஆகியோரும், தனதிகாரிகளாக திரு. ந. அருணசலம், திரு. ஆசீர்வாதம் ஹென்றி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். தொகுதிகள் தோறும் பரவலாக நிர்வாக உறுப்பினர்கள்தெரிவுசெய்யப்பட்டனர்.

# நாய்கடி நோய்க்கு மூவர் பலி

## யாழ்ப்பாணத்தில் நிலைமை மோசமடைகிறது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதியில் இப்பொழுது விசர்நாய்க்கடி நோய்க்குப் பலர் பலியாகி வருகின்றனர். கடந்த வாரத்தில் மாத்திரம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் விசர்நாய்க்கடி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களில் மூவர் மரணமாகியிருக்கிறுர்கள. இன்னும் ஒருவர் ஆபத்தான நிலையிலுள்ளார்.

கடந்த மாதத்திலும் இந்த ஆஸ்பத்திரியில் சிலர் விசர்நாய் கடித்து அதனுல் ஏற்பட்ட ஏற்பு வலியினுல் மரணமானுர்கள்.

இந்த நிலைமை முன்னர் எப்பொழுதும் இருந்ததில்லையெனச் சொல்லப்படுகிறது. நாய் கடித்ததும் பலர் சிகிச்சை பெருதிருப்பதுவும் 'கைட்ரோபோபியா' என்னும் 'நாய் கடிநோய்' ஏற்பட்டு முற்றிய பின்பே பலர் சிகிச்சைக்கு வருவதும் தான் நோயைத்தடுக்க முடியாமைக்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

## வேலைநிறுத்த சம்பளமில்லை

### நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு!

யாழ்ப்பாணம், புதன்

நகரசுத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தம் சட்டவிரோதமானதாக அமைந்துள்ளதால் வேலைநிறுத்த காலத்திற்கு சம்பளம் வழங்குவதில்லையென்றும், மற்றைய விஷயங்களையிட்டு எவ்வித நடவடிக்கையும் எடுப்பது அவசியமில்லையெனவும் யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நகரசுத்தித் தொழிலாளர்கட்கு வேலைநிறுத்தச் சம்பளம் வழங்குவது சம்பந்தமாக அகில இலங்கை உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் சங்க காரியதரிசி அண்மையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதம் குறித்து ஆலோசிக்கப்பட்டபோதே மேற்கண்ட முடிவு செய்யப்பட்டது.

# இருகல்லூரிகளுக்கும் ரூ. 20,000 உதவி

## சூருவளி விளைத்த சேதத்தை திருத்த அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை கடற்கரைப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட சுருவளியினுல்தாக்குண்டு பெருஞ் சேததத்திற்குள்ளான இரு கல்லூரிகளுக்கும் உடனடியாகச் செய்யப்படவேண்டிய வேலைகளைக் கவனிப்பதற்காக தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது: பருத்தித்துறை பலநோக்கக் கூட்டுறவுச் சமாஜத்தின் மூலம் கல்லூரி புனருத்தாரணவேலைகளை இப்பணத்தைக்கொண்டு உடனடியாக ஆரம்பித்து முடித்து பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும்படியும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர மகளிர் கல்லூரி ஆகிய இரு ஸ்தாபனங்களும் அண்மையில் பெய்த பெருமழையின்போது 30 நிமிஷங்கள் மாத்திரம் அப்பகுதியில் நிலைத்த சூருவளினுல் பெருஞ் சேதத்திற்குளளாயின. இதனுல் இகல்லூரிகள் இப்பொழுது தற்காலிகமாக மூடப்பட்டிருப்பதும் ஞாபகமிருக்க

8 பக்கம்பார்க்க)

வரி விளம்பரம்

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி

6%

உறுதியான இடம்

சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

தேவை

எனது ஓவிய நிலையத்தில் வேலைசெய்ய உதவியாளர் (Commercial Artist) தேவை. செ. இரத்தினகோபால், 39, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

641

தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கூற்றலோக் இனம். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்


## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

### புதன் 16-1-61

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-35 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை. 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 மகேஸ்வரி நகுலேஸ்வரன் — வயலின், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வி. சச்சிதானந்தம் — பேச்சு, 9-30 கே. கே. கிருஷ்ணபிள்ளை — பாட்டு, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப்பளிகளுக்கு, 3-50 தியாகராஜஉற்சவம் (திருவையாறு அஞ்சல்).

மாலை 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்திவிளக்கம், 7-45 மாணுற்றின் கரையினிலே — தொடர்கதை, 8-00 எந்நாளும் காப்போம், 8-10 தியாகராஜ உற்சவம் (திருவையாறு அஞ்சல்), 8-45 தியாகராஜ உற்சவம் (திருவையாறு அஞ்சல், 9-30 டெல்லிஅஞ்சல், 9-30 தியாகராஜ உற்சவம் (திருவையாறு அஞ்சல்).

# 'மொழிப்பிரச்னையை தீர்க்க நடவடிக்கை எடுக்கவும்'

## அரசாங்கத்துக்கு யாழ். மாநகரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

இந்நாட்டின் பொருளாதார முடையை அறவே ஒழிக்க இரு பெரும் சமூகங்களுக்கிடையே ஒற்றுமை அவசியமாகையால் அதற்கு இடையூருகவுள்ள மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்குவேண்டிய சகல நடவடிக்கைகளையும் காலந்தாழ்த்தாது எடுக்கவேண்டுமென்று பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று யாழ்ப்பாணம் மாநகரசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மேற்கண்ட தீர்மானத்திற்கான பிரேரணையை திரு. என். டி. செல்லத்துரை கொண்டுவந்தார்.

தீர்மானத்தின் விபரம் வருமாறு:-

"எந்தக் காலத்திலும் இல்லாதவகையில் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் இலங்கை அரசாங்கம் இப்பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணமாக இருப்பது என்னவென்பதை உணராது வெளியுலக விவகாரங்களில் அதிக ஈடுபாடு காட்டுவதுடன் மட்டும் திருப்திப்படுகின்றது. இதனால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மேலும் மேலும் நீடித்து இலங்கை தனது வாழ்வுக்கு அண்டை நாடுகளைக் கையேந்தி நிற்க வேண்டியிருக்கிறது. ஆதலால் துரதிருஷ்டவசமாக இலங்கையின் இரு பெரும் சமூகங்களான சிங்கள-தமிழ் சமூகங்களின் நல்லுறவு மொழிப்பிரச்னை காரணமாகப் பங்கப்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் சமூகப் பிளவு மீண்டும் ஒன்றுபடுவதற்கு ஏற்றதான ஒற்றுமைப் பாலத்தை புதுவருடத்தில் அரசாங்கம் அமைக்க வேண்டும். இந்த ஒற்றுமையே நாட்டின் பொருளாதார முடையை அறவேயொழிக்க ஏற்ற சாதனம் என்பதை இச்சபை அரசாங்கத்தின் கவனத்திற்குத் தெரிவிப்பதுடன், மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேலும் மேலும் காலம்தாழ்த்தாது பிரதமர் எடுக்கவேண்டும்என்றும் கேட்டுக்கொள்ளுகின்றது."

## பொலிசாரின் கோரிக்கை

கொழும்பு ஞாயிறு,

கொழும்பு நகரில் சில பகுதிகளில் குடிகொண்டுவிட்ட அனாசாரச் செயல்களைக் களைவதற்குத் துணைபுரியக்கூடிய நம்பிக்கையுள்ள உளவாளிகளைத் தேடித்தரும்படி பொலிஸார் கண்காணிப்புச் சபையைக் கேட்டிருக்கின்றனர். இந்த இயக்கத்துக்கு டாக்டர் டபிள்யு. பாலேந்திரா தலைவராக இருந்து வருகிறார்.

பலசமயங்களில் பொலிசார் தாங்களாக அமர்த்திக் கொள்ளும் ஆட்கள் முடிவில் தங்களை ஏமாற்றிவிட்டுப் போய் விடுவதால் பொலிஸார் தொடரும் வழக்குகள் சித்திக்காமல் போய்விடுகிறதென்றும் இதனால் குற்றம்சாட்டப்பெற்று நீதிஸ்தலத்துக்குக் கொண்டுவரப்படும் பெண்களை நீதிபதி விடுதலை செய்து வழக்குகளைத் தள்ளுபடி செய்யவேண்டியதாகிறதென்றும் சொல்லப்படுகிறது இந்த உளவாளிகள் கோர்ட்டில் நீதிபதிமுன் சாட்சியம் கூறும்போது முன்னுக்குப்பின் முரண்படப்பேசி வழக்குகளைக் கெடுத்துவிடுவதாய்பொலிஸார்கூறுகின்றனர்.

நகரில் குறிப்பாக மருதானைப்பகுதியில் மாலைமோகினிகள் என்ற இந்த விலைமாதர்களின் நடமாட்டம் அத்துடன் கசிப்பு என்ற கள்ளச் சாராயத்தின் வியாபாரம் இரண்டும் உடனடியாக கவனம் செலுத்தவேண்டிய அளவுக்கு அதிகமாகி வருகிறதெனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

## இராணுவ உத்தியோகத்தர் 9 பேர் தற்காலிக வேலைநீக்கம்

கொழும்பு, திங்கள்

இலங்கை இராணுவத்தில் கடமையாற்றி வந்த ஒன்பது இராணுவ உத்தியோகத்தர்கள் சென்ற வருடம் டிசம்பர் 21-ந் திகதியிலிருந்து தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனரென நேற்று வெளியான அரசாங்க வர்த்தமானி ஒன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சென்ற வருடம் ஜனவரி 27-ந் திகதி முறியடிக்கப்பட்ட சதித்திட்டத்தில் சந்தேகிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டவர்களாகும்.

கேர்னல் மோரிஸ் டி' மெல், லெப்டினண்ட் கேர்னல் டபிள்யு. எஸ். ஏபிரஹாம், மேஜர் எம். ஐ. லொயலா, மேஜர் டபிள்யு. ஜி. வைட், மேஜர் வி. எல். பி. ஜோசப், லெப்டினண்ட் கேர்னல் நோயல் மத்தியூஸ், டி. ஈ. வீரசிங்கா, காப்டன் ஏ. பி. அங்கி, காப்டன் நிமால் ஜெயக்கொடி ஆகியோரே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள்.

## ஏற்புவலி மருந்தின் அவசியம்

கொழும்பு, செவ்வாய்

'ஏற்புவலி மருந்துகள் போதியளவு கிடைக்க உடனடியாக வழி செய்யாதுபோனால் அரசினர் வைத்திய சாலைகளில் ஏற்புவலிக்கு கண்டு மரணமடைவோர் எண்ணிக்கை மேலும்அதிகரித்துக்கொண்டே போகும்' என்று கொழும்பிலுள்ள லூழ்ந்தைகள் வைத்தியசாலை உத்தியோகத்தர் சுகாதாரப்பகுதி அதிகாரிகளிடம் கூறியுள்ளனர்.

சென்ற வாரம் இந்த வைத்தியசாலையில் மற்றும் மூன்று மரணம் இதே காரணங்களால் சம்பவித்ததாக அறிவிக்கப்பட்டது. ஏற்புவலி மருந்துகள் தேவைக்கேற்ற அளவு கிடைக்காததினுல் அங்கிலே ஏற்பட்டு மரணமடைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக யாழ்ப்பாணம், கண்டி, குருநாகலை, காலி, மட்டக்களப்பு பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளிலிருந்தும் அறிவிக்கப்பட்டுள்ளன. மருந்து உடனே தேவை என்று இங்கெல்லாமிருந்து அறிவித்தல்கள் கிடைத்துள்ளன.

## இலக்கிய விழாவில் கருத்துமோதல்!

யாழ்ப்பாணம். புதன்

ஞாயிற்றுக்கிழமை இலங்கை சாகித்திய மண்டல ஆதரவில் நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழ் இலக்கியவிழா நிகழ்ச்சிகளின்போது திரு. க. தி. சம்பந்தன் பேசுகையில் ஏற்பட்ட கருத்துமோதல் சமாதானமாகத் தீர்ந்தது. திரு. சம்பந்தன் சிறுகதை இலக்கியம் பற்றிப் பேசுகையில் திரு. கே டானியல் எழுந்து துண்டுப்பிரசுரமொன்றினைத் தலைவரிடம் கொடுத்தார். திரு. கே டானியல் அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு விழாத்தலைவர் முதலியார் சின்னத்தம்பி கூட்டமுடிவில் அனுமதி வழங்கினுர். திரு. டானியலின் மறுப்புகளுக்கு திரு. சம்பந்தன் தகுந்த விளக்கம் கொடுத்தார் இதனுல் நிலைமை சுமுகமாகியது. கருத்துமோதலை சுமுகமாகத் தீர்த்துக் கொண்டமைக்கு தலைவர் நன்றி தெரிவித்தார்.

—

புதுடில்லி, ஜன 12

மிகச் சிறந்த வீரம் காட்டும் தீரமான ஜவானுக்கு வழங்குவதற்காக 2700 கிராம் எடையுள்ள வெள்ளிக் கோப்பை ஒன்றை முசம்மது அலிகான் என்பவர் வழங்கியிருக்கிருர். 1917 ம் அண்டில் போலோ பந்தயத்தில் இக் கோப்பை பரிசாகப் பெற்றதாகும்.

## சுகாதார டைரக்டர் எச்சரிக்கை

கொழும்பு, திங்கள்

பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கேட்கும் நேரங்களில் வைத்திய அதிகாரிகள் தாங்கள் பரிசோதனை செய்தவர்களின் விபரங்களைத் தெரிவிக்கத் தவறக் கூடாது எனச் சுகாதார டைரக்டர் வைத்தியர்களுக்கு எச்சரித்துள்ளார். இப்பொழுதுள்ள சட்டப்படி எந்த வழக்கிலும் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தொடர்புடையவர்களை வாய்மறுமொழி கேட்க பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு என டைரக்டர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுகாதார இலாகா வைச் சேர்ந்த வைத்தியர்கள், தாங்கள் பரிசோதனை செய்தவர்களைப்பற்றிய சில விபரங்களைக் கூறுவதில் அக்கறை காட்டுகிருர்களில்லை என்றும் இதனுல் பலவழக்குகளைப் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் புலன் செய்ய முடிவதில்லை என்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சுகாதார டைரக்டருக்கு அறிவித்திருந்தார். இதைத் தொடர்ந்தே சுகாதார டைரக்டர் வைத்திய அதிகாரிகளுக்கு மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.


நீங்கள் அறியவேண்டியதோர் இரகசியம் பொஸ்



BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்

நீடியகால சேவையையும், சிக்கன சமையலையும் அளிப்பதற்கென தயாரிக்கப்பட்டவை.

சமையல் அடுப்பு — 27U — 2 பர்னர்கள்


பொர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள், 2 கால கலன் கொள்ளளவு எரிபொருள் தாங்கி, ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும், திறக்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 37U — 3 பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகை போக்கிகள். 2 கால் கலன் கொள்ளளவு எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். திறக்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 20U — 2 பர்னர்கள்

மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ளது. சமைப்பதற்கென விசாலமான மேற்புற இடவசதியுண்டு. பொர்ஸலேன் மேற்புறம் கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால கலன் கொள்ளளவு எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும், பின்புறமும். திறக்கும் மோடல் உண்டு



பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான பேட்டம்.

விசாரணைகளுக்கு: CWE ஸி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட். ஸி. டப்ளியூ. ஈ. கடை, மருதானை மற்றும் வெலிஹூர் டிப்போக்கள்

CWE HW

# கொழும்பு மகாநாட்டு யோசனைகளை இந்திய பார்லிமெண்ட் ஏற்கும்

## நேருவைச் சம்மதிக்க செய்ததில் மூன்றுநாட்டுத் தூதர்கள் வெற்றி

புதுடில்லி, ஜன. 15

**இந்திய-சீன எல்லைத் தகராறுக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள்பற்றி கொழும்பில் கூடிய ஆறு ஆசிய ஆபிரிக்க நடுநிலைமை நாடுகள் தெரிவித்த யோசனையை இந்தியப் பிரதமர் கொள்கையளவில் கூட ஏற்றுக் கொண்டாரா என்பதை கொழும்பு மகாநாட்டில் கலந்து கொண்ட மூன்று நாட்டுப் பிரதிநிதிகளும் திரு. நேருவும் புதுடில்லியில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவில் வெளியான கூட்டறிக்கை உறுதிப்படுத்தவில்லை.**

### இந்தியா தியாகம் செய்ய வேண்டும்

கொழும்பில் கூடிய நடுநிலைமை நாடுகளின் யோசனைகளை ஏற்றுக் கொள்வதா, நிராகரிப்பதா என்பதுதான் இந்தியப் பிரதமர் நேருவுக்கிருந்த பிரச்னையென்றும் மகாநாட்டு யோசனைகளை நேரு ஏற்றுக் கொண்டாரென்றும் ஆனல் இந்தியப் பார்லிமெண்டின் அங்கீகாரத்துக்கு இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதை உறுதியாகத் தெரிவித்திருந்தாரென்றும் அறியப்படுகிறது. இந்திய தரப்பில் அதிக தியாகம் செய்யக் கோரும் முடிவுக்கு இறுதி மூன்றுநாள் பேச்சுவார்த்தைகள் கொண்டுவந்துவிட்டதாக இந்திய அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. இந்தியப் பிரதேசத்தில் 1962-ம் ஆண்டு செப்டம்பர் 8-ந் திகதிக்குப் பின் சீனர் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து சீனர் வாபஸாக வேண்டுமென்று இந்தியப் பார்லிமெண்ட் முதலில் தீர்மானித்திருந்தது. எனவே வேறு எந்த சமரசத் தீர்வை ஏற்றுக் கொள்வதாகவிருந்தாலும் பார்லிமெண்டின் அங்கீகாரம் பெற்ருக வேண்டும். ஆசிய–ஆபிரிக்க ஐக்கியத்தை முன்னிட்டு கொழும்பு மகாநாட்டு சமரச யோசனையை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் இலங்கைப் பிரதமரும் கானு, ஐக்கிய அரபுக்குடியரசுப் பிரதிநிதிகளும் வெற்றிபெற்றுள்ளரென்று கூறப்படுகிறது.

### பார்லிமெண்ட் விவாதிக்கும்

"கொழும்பு மகாநாட்டு யோசனைகள் குறித்து ஜனவரி 12, 13-ந் திகதிகளில் இந்தியப் பிரதமமந்திரி, அவருடைய சகாக்கள் ஆகியோருக்கும் மூன்று தூதுகோஷ்டிகளுக்கும் இடையே விரிவான விவாதம் நடைபெற்றது. இந்திய அரசாங்கத்தின் வேண்டுகோளின்பேரில், மகாநாட்டுப் பிரேரணைகள் குறித்து விரிவான விளக்கங்களைத் தூதுகோஷ்டித் தலைவர்கள் தெரிவித்தனர். இந்தியாவின் கௌரவம், சுயமரியாதைக்கு உகந்தவகையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள தன் தரப்பில் இந்தியா தயாரென தூதுகோஷ்டித் தலைவர்களிடம் இந்தியப்பிரதமர் தெரிவித்தார். பிரேரணைகளுக்கு விளக்கங்களைத் தெரிவித்ததற்காக, தூதுகோஷ்டித் தலைவர்களைப் பிரதமர் பாராட்டினர். கொழும்பு மகாநாட்டு நாடுகளின் முயற்சியை அரசாங்கம் வரவேற்பதாக தூதுகோஷ்டித் தலைவர்களிடம் பிரதமர் நேரு தெரிவித்தார். பரிசீலனைக்காகப் பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்தில் பிரேரணைகளும் விளக்கங்களும் சமர்ப்பிக்கப்படும் என்றும் இந்தியப் பார்லிமெண்ட் அவற்றைப் பரிசீலித்த பிறகு பிரேரணைகளுக்கு இறுதிப்பதில் தெரிவிக்கப்படும் என்றும் அவர்களிடம் பிரதமர் தெரிவித்தார்" என்று கூட்டறிக்கை கூறுகிறது. இந்தியப் பர்ர்லிமெண்ட் இம்மாதம் 21-ந் திகதி கூடுகிறது.

### பார்லிமெண்ட் அங்கீகரிக்கும்

நேருவைத் தலைவராகக் கொண்ட பெரும்பான்மைப்பலம் உடைய இந்திய தேசிய காங்கிரஸ் கொழும்பு மகாநாட்டு யோசனைகளை ஏற்றுக் கொள்ளுமாதலால் இந்தியப் பார்லிமெண்ட் இந்த யோசனைகளை அங்கீகரிப்பதில் சிரமமிருக்காதெனக் கருதப்படுகிறது. சமீபத்திய சீன ஆக்கிரமிப்பு ரத்துச் செய்யப்படும் என்ற கொள்கைக்கு கொழும்பு மகாநாட்டுப் பிரேரணைகளும் விளக்கங்களும் வகை செய்வதாக கிட்டத்தட்ட உள்ளதாக இந்திய அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார். சில விளக்கங்களுக்குட்பட்டு கொழும்பு மக நாட்டுப் பிரேரணைகளை ஏற்குமாறு பார்லிமெண்டுக்குச் சிபார்சு செய்வதென இந்திய மத்திய மந்திரிசபை முடிவுசெய்துள்ளது.

### தரம் குறையக்கூடாது

நெருக்கடி நிலைமையால் திட்டங்களின் தரம் குறையக் கூடாதென்றும் சில திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள போதிலும் பல திட்டங்கள் விரைவுபடுத்தப்பட வேண்டியது அவசியமென்றும் எஃகு கனரக மந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம் நேற்று சென்னையில் கூறினர்.

### மாணவர்களுக்குக் கட்டாயப் பயிற்சி

கல்லூரியிலுள்ள உடல்வலுவுள்ள மாணவர்களை தேசிய கடேற்படையில் கட்டாயமாக்கும் திட்டம் பல இடங்களிலும் அமுலுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது, கடேற்படைப் பயிற்சியில் மாணவாகளுக்கு 'மார்க்குகள்' கொடுக்கப்படுவது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படுகிறது. கடேற்படையில மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஆசிரியர்களைத் தயார் செய்வதற்கென ஹைதராபாத்தில் ஆசிரியர் பயிற்சி முகாம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. மத்திய பிரதேசத்தில் 175,000 பேர் கொண்ட தொண்டர்படை அமைக்கப்படுகிறது.

### ஒரு கூட்டத்தில் 3 லட்சம் வசூல்

கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் மேற்கு வங்க முதன்மந்திரியிடம் மூன்றுலட்சம் ரூபாய் ரொக்கப்பணமும் 14,000 கிராம் தங்கம், தஙகநகைகளும் வழங்கப்பட்டன. திருவனந்தபுரததில் இரண்டாயிரம் ரூபாய் பெறுமதிக்கு புதிய பரிசுப்பத்திரங்கள் விற்பனையாகின. ராஜஸ்தானில் ஒருவர் 46,000 கிராம் தங்கத்தை தங்கப்பத்திரங்களில் முதலீடு செய்தார்.

### தங்கநகைகள் வாங்க வேண்டாம்

நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு தங்கநகைகளையும் தங்கத்தையும் வாங்க வேண்டாமென்று பொதுமக்களையும் குறிப்பாகப் பெண்களையும் தங்கக் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் திரு. ஜி. பி. கோட்டா நேற்று பம்பாயில் கேட்டுக் கொண்டார். கலியாணத்துககுத் தங்கம் வாங்காமல் புதுமாதிரியான முறையில் தங்கப்பத்திரங்களை வாங்குமாறு அவர் யோசனை கூறினர்.

### இந்தியரைக் கொண்டுவரக் கப்பல்

மொஸாம்பிககிலிருந்து கட்டாயமாக வெளியேறபோர்ச்சுக்கீஸிய ஆட்சியினரால் உத்தரவிடப்பட்டுள்ள இந்தியர்களைதாய்நாட்டுக்கு ஏற்றிக் கொண்டு வருவதற்காக இருகப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளன. சுமார் இரண்டாயிரம் இந்தியர்கள் இக்கப்பல்களில் வந்துசேர வேண்டும். வழக்கமாக ஏற்றும் பிரயாணிகளின் தொகையைவிட நூறிலிருந்து இருநூறுவரை அதிகப் பிரயாணிகளை ஏற்றிவருவதற்கு இக்கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### ஐந்து கம்யூனிஸ்டுகள் விடுதலை

இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட கம்யூனிஸ்டுகளில் ஐந்துபேர் நேற்று குஜராத்தில் விடுதலை செய்யப்பட்டனர்.

---

ஜனாதிபதி கொலையின் எதிரொலி

## டோகோ ஜனாதிபதியின் ஒரு மகன் கைது

### புதிய அரசாங்கம் அமைக்கப்படுகிறது

பாரிஸ், ஜன. 15

சென்ற ஞாயிற்றுககிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்ட டோகோ ஜனாதிபதி திரு. சில்வேனஸ் ஒலிம்பியோவின் இறுதிச்சடங்குகள் இன்று பிற்பகல் நடைபெற்றன.

ஜனாதிபதியின் கொலை சம்பந்தமாக அவரது ஒரு மகனும் கைது செய்யப்பட்டுள்ளார். மனைவி கைது செய்யப்படவில்லை.

புதிய அரசாங்கம இன்று அமைக்கப்பட விருப்பதாக ஐ. நா. விலுள்ள டோகோ ஸ்தானிகர் தெரிவித்தார்.

டோகோ தலைநகரான லிமோவிலும் இதர நகரங்களிலும் நேற்றுக் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. இரவில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் மட்டும் துருப்புக்கள் ரோந்துக் காவல் புரிகின்றனர்.

டோகோ ஜனாதிபதி கொல்லப்பட்டதற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கினியில் மூன்று நாள் துக்கதினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. டோகோ ஜனாதிபதியின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்ள கினியிலிருந்து தூதுகோஷ்டியொன்று அனுப்பப்பட விருப்பதாக கினி ஜனாதிபதி தெரிவித்தார்.

---

## போலரிஸ் ஏவாயுதம் பிரான்சுக்கு தேவையில்லை

### அதிபர் டிகோல் அறிவிப்பு

பாரிஸ், ஜன. 15

அமெரிக்காவிடமிருந்து போலாரிஸ் ஏவாயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பிரான்ஸுக்கு ஆர்வமில்லை என்று பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல் நேற்று அறிவித்தார்.

நஸ்ஸோவில் நடைபெற்ற ஆங்கில அமெரிக்க உச்சிமகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட ஐரோப்பிய பாதுகாப்பு யோசனையை பிரெஞ்சு ஜனாதிபதி டிகோல் நிராகரித்தார்.

பிரான்ஸ் தனக்கெனத் தனியானதொரு அணு ஆயுத படையை வைத்துக்கொள்ளும் தனது திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுமென்றும் ஜனாதிபதி டிகோல் தெரிவித்தார். "அமெரிக்கா பல வருடங்களாக அணுஆயுதத்தில் வல்லமைபெற்று விளங்கியது. இப்பொழுது சோவியத் யூனியனும் அதற்குப் போட்டியாக அணுஆயுத வல்லரசாக விளங்குகிறது. அமெரிக்காவின் வாழ்வுக்கே ஆபத்தான மாதிரி சோவியத் யூனியன் ஆயுதபலம் பெற்றிருககிறது. இந்த சூழ்நிலையில் ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்கு அமெரிக்கா எந்த அளவில் உதவியாக இருக்குமென்பதை எவரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்று ஜனாதிபதி டிகோல் கூறினர்.

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வது சம்பந்தமாகவும் டிகோல் குறிப்பிட்டார். பொதுச் சந்தையில் சேர்ந்துகொள்வதா இல்லையா என்று முடிவுசெய்து கொள்ளவேண்டியது பிரிட்டனைப்பொறுத்த விஷயம் என்று அவர் குறிப்பிட்டார்.

---

## மந்திரிகள் கனடா திரும்பினர்

டோக்கியோ, ஜன. 15

ஜப்பான்-கனடாவர்த்தகத் தொடர்பை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் ஜப்பானிய மந்திரிகளுடன் டோக்கியோவில் பேச்சுவார்த்தை நடத்திய நீதி மந்திரியும் மீன்பிடி மந்திரியும் பேச்சு வார்த்தைகளை முடித்துக் கொண்டு கனடாவுக்குப் புறப்பட்டனர்.

---

## படை குறைப்பு அமெரிக்க-சோவியத் பேச்சு ஆரம்பம்

நியுயோர்க், ஜன. 15

படைகுறைப்பு, அணுஆயுத சோதனைத்தடை ஆகியவை சம்பந்தமாக அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் ஐ. நா.வில் ஆரம்பமாகியுள்ளன. அடுத்த மாதம் 12-ந் திகதி ஜெனிவாவில் படைகுறைப்பு மகாநாடு மீண்டும் ஆரம்பமாகும்போது மகாநாட்டில் நல்ல பலன் கிடைப்பதற்கு வழிகாணுமுகமாக இப்பேச்சுவார்த்தைகள் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

---

## பேர்லினில் குருஷ்சேவ்

பெர்லின், ஜன. 15

சோவியத் பிரதமர் திரு. நிகிட்டா குருஷ்சேவ் கிழக்கு பெர்லின் தலைநகர் போய்ச் சேர்ந்துள்ளார். கிழக்கு பெர்லின் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. வூல்பிரைட்டும் மற்றும் பலரும் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர். போலந்து கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கோமுல்கா தமது கோஷ்டியுடன் பெர்லின் போய்ச் சேர்ந்தார். கிழக்கு பெர்லின் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறு நாள் மகாநாடு இன்று ஆரம்பமாகிறது. இந்த மகாநாட்டில் திரு. குருஷ்சேவ் நாளை உரை நிகழ்த்துவாரென எதிர்பார்க்கப் படுகிறது.

---

## பிராக்கில் விவேகானந்தர் விழா

பிராக், ஜன. 15

சுவாமி விவேகானந்தரின் நூற்ருண்டு விழாக்கொண்டாட்டம் நேற்று செக்கோஸ்லவாக்கியாவின் தலைநகரான பிராக்கில் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டத்தில் பிராக்கிலுள்ள இந்தியத் தூதர் உரை நிகழ்த்தினர்

**மணி வாசகம்**

ஆண்களைவிட பெண்களே மேம்பட்டவர்கள். ஏனெனில், தியாகம், அடக்கம், நம்பிக்கை, அறிவு, வாய்பேசாது துன்பங்களை சகித்தல் இவ்வரிய குணங்களுக்கு அவர்களே உறைவிடமானவர்கள்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU, National Tami Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 3 உ (16-1-63)


## உதவித் திட்டம்

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரவிருத்திக்குக் கொழும்புத் திட்டம் சென்ற பத்து வருடங்களுக்கு மேலாகப் பேருதவி புரிந்து வருகின்றது. 'கொழும்புத் திட்ட ஆலோசனைக் கமிட்டியின் பதினொராவது ஆண்டு அறிக்கையின் பிரகாரம் இது வரை தென்கிழக்கு ஆசியநாடுகளுக்கு சுமார் 60 கோடி ரூபாய் உதவப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி தொழில் நுட்பஉதவிக்காக ஒதுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க வேறுவகையில் மேலும் 15 கோடி ரூபாய் இதுவரை செலவாகியுள்ளது. கொழும்புத்திட்ட நாடுகளுக்கு வெளியேயுள்ள நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், நியூஸிலாந்து ஆகிய ஆறுநாடுகளே அதிகமான உதவிகளை அளித்திருக்கின்றன.

ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டு வருவதால் பொருளாதார அபிவிருத்தியும் அதிற்கேற்ப விரிவடைய வேண்டியிருக்கின்றது. தென்கிழக்கு ஆசிய நாடுகள் வளங்குன்றியிருப்பதுடன் அங்கு ஜனத்தொகையும் அதிகரிப்பதால் பொருளாதாரவிருத்தி சம்பந்தமான வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டிய அவசியமேற்பட்டிருப்பதாக அறிக்கையிற் கண்டிருக்கின்றது. வளம் குன்றிய நாடுகளுக்குப் பரவலான முறையில் உதவியளித்து அவற்றின் பொருளாதார மேம்பாட்டுக்குக் கொழும்புத்திட்டம் உதவி செய்து வருவது உண்மையேயாயினும் இந்நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் நன்கு உயர்ந்து திருப்திகரமான ஒரு நிலை ஏற்பட இன்னும் பல துறையில் அபிவிருத்தி ஏற்பட்டேயாம் வேண்டும். கிடைக்கும் உதவிகளை எந்நாடும் நல்லமுறையில் பயன்படுத்தாவிடில் திட்டத்தின் அடிப்படை நோக்கமே தகர்ந்துவிடுகின்றது. இலங்கைக்குக் கிடைத்துவரும் வெளிநாடுகளின் உதவிகளும் திட்டப்படி உபயோகிக்கப்படுமாயின் கூடுதலான நன்மைகள் உண்டாக இடமுண்டு.

பரவலானமுறையில் பொருளாதார உதவி கிடைத்துவந்தாலும் அந்நாடுகளின் இயற்கைச் செல்வங்களை ஆக்கபூர்வமான வழியில் உபயோகிக்க வழிகாண்பது மிகஅவசியமாகும். இத்துறையில் தொழில் நுட்பக் கல்விபயில மக்களுக்கு வாய்ப்பளிப்பது இந்நாடுகளின் எதிர்கால சுபிட்சத்துக்கு உதவிபுரிவதாகும்.

பின்தங்கிய நாடுகளுக்குக் கிடைக்கும் உதவிகள் சிலசமயங்களில் அன்றாட தேவைக்கான பொருள்களாகவும் அமைந்துவிடுகின்றன. இவற்றை உடனடியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றாலும் அதே விரைவில் அந்தப் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ள முடியாத நிலையும், அவற்றைப் பழுதுபார்க்க முடியாத நிலையும் இந்நாடுகளுக்கு ஏற்படுகின்றது. எனவே பின்தங்கிய நாடுகளில் உள்ள மக்கள், தொழில் துறையில் வளம் அடைந்துள்ள நாடுகளுடன் அதிக தொடர்பு கொள்வதால் அந்நாடுகளின் தொழில் நுணுக்கத் திறமைகளைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே விஞ்ஞான-தொழில் நுணுக்க நிபுணர்களின் சேவை வளம் குன்றிய நாடுகளுக்கு இன்னும் அதிகமாகக் கிடைக்க வேண்டும்.

பின்தங்கிய நாடுகள் நன்கு விருத்தியுற வேண்டுமென்ற ஆர்வம் உலகில் இருந்துவருதாக அறிக்கை கூறுகின்றது. ஆனால் இந்நாடுகள் வளர்ச்சியுற்றுவரும் வேகத்தைக் கவனிக்கும் போது விரும்பியளவு விருத்தி இந்த நூற்றாண்டில் ஏற்படுமோவென்பது சந்தேகமே.

பணமும், பொருளும், நிபுணர்களின் ஆலோசனையும், தொழில்நுட்பப் பயிற்சிமூலம் இலங்கைக்குக் கிடைத்துவந்த போதிலும் அவற்றைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை இங்கு மீண்டும் வற்புறுத்துகின்றோம். அத்துடன் கடந்த காலத்தைப் போலவே எதிர்காலத்திலும் கொழும்புத் திட்டத்தின்மூலம் இலங்கைக்கு உதவி கிடைக்க வேண்டியதன் அவசியத்தையும் இவ்வேளையில் நினைவூட்ட விரும்புகின்றோம்.

# மாணவருக்கு சமத்துவம்
## அமெரிக்காவின் கல்விக்கொள்கை

**மாணவர்களுக்குச் சமத்துவம் அளித்து பல வகைப் பண்பாடுகளையும் பாதுகாக்கும் அமெரிக்காவின் கல்விக்கொள்கையை தாமஸ் எஸ். கிறிவ்லண்ட் இங்கு விளக்குகின்றார்.**

பல நாடுகளிலிருந்து வந்த பலவகை மக்கள் வாழும் நாடு அமெரிக்கா. எனவே சமூக, பண்பாட்டு, பொருளாதார வாழ்க்கையில் பல்வகை வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இங்கு எண்ணிறந்த பலவகைக் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் உள்ளன. பலவகைப்பட்ட தொழில் கல்லூரிகளும், தொழில் நுட்பக் கல்வி நிலையங்களும், மற்ற மேற்படிப்புக் கல்விக் கூடங்களும் ஏராளமாக உள்ளன. சில கல்லூரிகளில் சேர்வதற்குச் சிறப்புத் தகுதிகள் வேண்டும். வேறு சிலவற்றில் சேர்வதற்கு அத்தகைய தகுதிகள் வேண்டியதில்லை. பாடத்திட்டம் கற்பிக்கும் முறை, கல்வியின் நோக்கம், பட்டம் பெறத்தகுதி ஆகியவை கல்லூரிக்குக் கல்லூரி வேறுபடுகின்றன. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ளதுபோல கல்லூரிகள் பல்கலைக் கழகங்களோடு இணைந்திருக்கவேண்டியதில்லை. ஒவ்வொரு கல்வி நிலையமும் தான் வகுத்துள்ள தகுதிகளுக்கு இணங்க தானே பட்டங்கள் வழங்குகிறது.

இந்த வேறுபாடுகளைக் குறைக்கும் ஏற்பாடுகளும் உண்டு. கல்வித்துறைக்கு குறைந்த அளவை ஒன்று இருந்து வருமாறு பார்க்கும் பொருட்டு ஐந்து கழகங்கள் பணியாற்றுகின்றன. அவை பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகிய வற்றின் தகுதியை நுணுகி ஆராய்ந்து, அவை தகுதி வாய்ந்தவையா, தகுதி இல்லாதவையா என்பதை முடிவு செய்கின்றன.

அவ்வாறே மருத்துவம், சட்டம், மறையியல் முதலியவை பற்றிய தொழில் கல்லூரியின் தகுதியை மதிப்பிடும் பிரதேசக் கழகங்கள் உள்ளன. இவையெல்லாம் அரசாங்கத் தலையீடும், வேறு அதிகாரத் தூண்டுதலும் இன்றி, பொது மக்கள் தாமாக அமைத்துக் கொண்ட கழகங்கள்.

இவையெல்லாம் ஒருவகை ஒருமைப்பாட்டை நிறுவும் முயற்சிகள். எனினும், இந்த மதிப்பீட்டு முறையை விரும்பாத கல்வி நிலையங்களும் பட்டங்கள் வழங்கலாம். ஆனால் அத்தகைய நிலையங்களைப் பற்றி மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நம்பிக்கை ஏற்படாது. அதுவுமல்லாமல், அத்தகைய கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்களைச் சிறந்த மேற்படிப்பு நிலையங்களில் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள்.

### ஜனநாயகத்துக்கு ஏற்ற முறை

ஜனநாயகத்துக்கு ஒரே விதமான கல்வி முறையைவிடப் பல வகைப்பட்ட கல்வி முறை நல்லது. உயர்தரக் கல்விக்கு நிதி வழங்குவது பற்றிய குழு, "சுதந்திரத்திற்கு அடிப்படை பல்வகைத் தன்மையே" என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கை இந்த உண்மையைத் தெளிவு படுத்தும்.

"சுதந்திரம் இருந்தால், பலவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்க வேண்டும். ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாயின், பலவகைப்பட்டவை இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் இந்தப்பல் வகைகளில் ஒரு வகையைத் தேர்ந்தெடுக்க முடியும்" என்று அந்தக் குழு எழுதியுள்ளது.

மாணவர்கள் தங்கள் திறமைக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ற கல்வி நிலையத்தைத் தேர்ந்தெடுக்க இம்முறையில் அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

### முக்கிய நோக்கங்கள்

அமெரிக்கக் கல்வித்துறை நான்கு முக்கிய நோக்கங்கள் கொண்டன. அவையாவன: (1) தனியாள் தன்னையும் தன் தகுதியையும் திறமையையும் அறிந்து முன்னேற்றமடையக் கல்வி துணை செய்ய வேண்டும். (2) மாணவர்களை சிறந்த பிரஜைகளாக்கவேண்டும். (3) ஒளிப்பு மறைப்பு அற்ற மாறுதல் அடையும் சமுதாயத்தில் தனியாட்களை, உற்பத்தியைப் பெருக்கும் உழைப்பாளிகளாக்க வேண்டும். (4) குடும்பத்திலும் சமுதாயத்திலும் நல்லவர்களாகத் தனியாட்கள் விளங்குமாறு செய்ய வேண்டும்.

கீழ்வகுப்புக் கல்வி முதல் மேல் வகுப்புப் படிப்பு வரை இந்த நோக்கங்கள் கைகூட முயற்சி செய்ய வேண்டும். அதன் பொருட்டு, ஆரம்பக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கூடக்கல்வி, கல்லூரிக் கல்வி ஆகிய மூவகைக் கல்வியையும் ஒரே அமைப்பில் பெறுவதற்துப் பல இடங்களில் வழி செய்திருக்கிறார்கள்.

### உயர்தரக் கல்வி பெறுவோர் தொகை அதிகம்

அமெரிக்காவிலுள்ள இளைஞர்களில் நூற்றுக்கு முப்பது பேர் கல்லூரிகளிலாவது பல்கலைக்கழகங்களிலாவது கற்கத் தொடங்குகின்றனர்; சுமார் நூற்றுக்குப் பதினைந்து பேர் நான்கு ஆண்டுப் படிப்பையாவது முடிக்கின்றனர்.

அமெரிக்காவில் கல்லூரிக் கல்வி பெறுவதற்கு மிகப் பலருக்கு வாய்ப்பு உண்டு. பொது நிதிகளால் ஆதரிக்கப்படும் ஆரம்பப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் எவ்விதக் கட்டணமும் செலுத்தாமல் இலவசமாகக் கல்வி பயிலலாம். பொது நிதிகளால் நடைபெறும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மிகவும் குறைந்த படிப்புச் சம்பளம் கொடுக்க வேண்டியதாகும். அவற்றையும் இலவசக் கல்வி நிலையங்கள் என்று சொல்லிவிடலாம்.

அமெரிக்கக் கல்வி முறை பலவகைப்பட்டதாக இருப்பதால், அது மாணவர்கள் தங்களுக்கு ஏற்ற முறையைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வழங்குகிறது. அமெரிக்காவின் சுதந்திர நிலையை அது புலப்படுத்துகிறது. சுதந்திரமுள்ள இடத்தில் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கத்தான் வேண்டும். அதுவுமல்லாமல், பலவகைப் பண்பாடுகள் உள்ள நாட்டில் பலவகைக் கல்வி முறைகள் நிலவுவது இயல்பே. எனவே, பலவகைக் கல்வி முறைகள் பலவகைப் பண்பாடுகள் இருப்பதைக் காட்டுவனவாகவும் உள்ளன.

மதம், இனம், முன்னோர், நாடு ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகள் குறித்து அமெரிக்கர் பெருமை கொள்கின்றனர். தங்கள் பண்பாட்டுச் சுதந்திரத்தைப் பேண விரும்பும் சமுதாயங்கள் இருக்கும்வரை அமெரிக்கர்கள் இந்தப் பலவகைத் தன்மையை ஆதரிக்கவேண்டியதாகும்.

மாணவர் அனைவரும் சமத்துவ வாய்ப்புப்பெறும நிலைமையில் பலவகைப் பண்பாடுகளையும் பாதுகாக்கவேண்டும் என்பதே அமெரிக்காவின் கல்விக் கொள்கை. பலவகை மரபுகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் பழைமையை மறந்துவிட்டு, தற்கால அமெரிக்காவின் வேறுபாடு காணமுடியாத ஒரே மக்களாக விளங்குமாறு செய்ய, கல்வியின் மூலம் அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. அதே சமயத்தில் வரலாறு, மதம், பண்பாடு பற்றிய தங்கள் மரபுகளை அவர்கள் பேணிக்கொள்வதற்கும் அவர்களுக்கு ஆதரவளிக்கப்படுகிறது. அவர்கள் மற்றவர்களோடு வாழலாம்; எனினும் தங்கள் தனித்தன்மையைக் காப்பாற்றிக்கொள்ளலாம். மாணவர்கள் தங்கள் மரபுகளைப் பேணிக்கொள்ள தனியார் பள்ளிகள் வழிவகுக்கின்றன. பல்வகைத் தன்மையை அவை வளர்க்கின்றன. தனியார் கல்வி நிலையங்களில் ரோமன் கத்தோலிக்க நிலையங்கள் முக்கியமானவை; மற்ற மதப் பிரிவுகளைச் சேர்ந்த கல்வி நிலையங்களும் உள்ளன.

அமெரிக்கக் கல்வி முறையில் பலவகைத் தன்மை காணப்படினும், ஒருமைப்பாடும் தெளிவாக நிலவுகிறது. நோக்கத்தில் ஒற்றுமை காணப்படுகிறது. அதுவே மக்களை ஒன்றுபடுத்துகிறது. பயன்படும் வாழ்க்கையை அடைதல், ஜனநாயக உரிமையைப் பாதுகாத்தல், அறிவாலும் உடல் நலத்தாலும் இன்ப வாழ்க்கை பெறுதல் ஆகியவை அந்தப் பொது நோக்கங்கள்.

## ஐயாறன் எழுதுவது

ஏனோ தெரியவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வருகையில் சீனப் பெட்டியே என் முன்வந்து நிற்கிறது. இம்முறையும் சீனப்பெட்டியிலேயயே ஏறி வந்தேன். பிரயாணம் மிக வசதியாகத் தானுள்ளது. ஒருவேளை சீனத்தின்மீது எனக்கு மனக்கசப்பு எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாதென்றோ இப்படி ஏற்படுகிறது போலும்!

சென்ற வருஷம் ஜனவரியில் தான் சென்னையில் பெரம்பூரிலே ரயில்வே பெட்டிகள் செய்யும் தொழிற்சாலைக்குச் சென்று பார்த்தேன். அங்கு மூன்றும் வகுப்புப் பெட்டியிலே பெஞ்சுகளில் ஆசனத்திலோ பின்புறமோ மெத்தை எதுவும் கிடையாது. எல்லாம் மரப் பலகைதான். மூன்றும் வகுப்பில் பிரயாணம்செய்பவரும் மனிதர்களேயாதலால், அப்பெஞ்சுகளை வசதியாக, மெல்லிய மெத்தையுடன் அமைக்கப்படாதா என்று அங்கிருந்த ஓர் அதிகாரியைக் கேட்டேன். அதற்கு செலவு அதிகமாகுமென்று ஏதோ சாக்குச் சொன்னார். எனக்கு அந்த சமாதானம் திருப்தி அளிக்கவில்லை. இந்திய ரயில்வேக்கள் நல்ல லாபத்தில் நடக்கின்றன. மூன்றும் வகுப்பினருக்கு பல வசதிகளைச் செய்துவருகின்றனர். அவசியமாயின், முதல் இரு வகுப்புகளை நீக்கிவிட்டு, சீனப் பெட்டிகளைப் போல், மூன்றும் வகுப்பெல்லாம் வசதியானமுறையில் அமைத்தால், பொதுமக்கள் ரயில்வே யாத்திரையை பெரிதும் விரும்பக்கூடும். ஏழை, செல்வந்தர் என்ற வேற்றுமைகளை கூடுமானவரை ரயில்வேக்களில் நீக்குவது நல்லது. சமதர்மத்தைப் படிப்படியாகப் புகுத்துவதாகக் கூறும் இந்தியாவில், மட்டுமின்றி இலங்கையிலும் ரயில்வேயிலே இவ்வித மாறுதல் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

* * *

கொழும்பு தட்டாரத் தெருவிலே ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில், ஸ்ரீ சண்முகானந்த கான சபையினர், சில வருடங்களாக, வெள்ளிக்கிழமைகளில் கூட்டு வழிபாடு நடத்திவருகிறார்கள். இங்கு ஒரு விசேஷமென்னவெனில், கூட்டுப்பிரார்த்தனைக்கு கூட்டம் பரவர அதிகரித்துவருவதுதான.

ஜிந்துப்பிட்டி எனும் ஜயந்திநகா கோவிலில்தான் கூட்டு வழிபாட்டு இயக்கம் ஆரம்பமானது. அங்கு வாராவாரம் சராசரி இருநூறுபேருக்கு மேல் கலந்துகொள்வர். ஆனால் சென்ற ஞாயிறன்று ஐம்பது பேர்கூட இல்லை. இதைக காண மிக ஏமாற்றமாக இருந்தது. இதைக்கண்ட ஒரு சிங்கள கத்தோலிக்க அன்பர், தங்கள் கோவிலில், நிற்கவும் இடமின்றி கூட்டம் கூடுவதாயும், பேச்சு கால்மணி நேரத்துக்குமேல் இராதெனறும், ஒருமணி ஒன்றரை மணிஎன்று பேசுவதாயின், 'போர்' அடித்து மக்கள் எழுந்து சென்றுவிடுவரென்றும் சொன்னார்.

கூட்டுப்பிரார்த்தனை இயக்கம், மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும் அன்பைப் பெருக்கவும் பெரிதும் உதவக்கூடியது. பல சமயத்தவரையும் சேர்த்து, ஒற்றுமைப்படுத்தும்படியான முறையில் மகாத்மா காந்தி அடிகள் கூட்டுப்பிரார்த்தனை இயக்கத்தை நடத்தினர். அதேபோல் இலங்கையிலும், இந்தியாவிலும் வளரவேண்டும். அதற்கான முறையில், மக்கள் மனதைக் கவரத்தக்க விதமாக இதை எந்த புண்ணிய புருஷன் அமைத்து நடத்தப்போகிறாரோ?

* * *

தட்டாரத்தெரு கூட்டுப் (8ம் பக்கம் பார்க்க)

# 'நல்ல தமிழ் பரப்ப சிறந்த பத்திரிகைகள் வளரவேண்டும்'

## 'கலைச்செல்வி' ஆண்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

"யாழ்ப்பாணத் தமிழ் தென்னிந்தியாவான தமிழகத்திலேயே போற்றிப் புகழப்படும் சிறப்புடையது. அத்தகைய நல்ல தமிழைப் பரப்பவும் வளர்க்கவும் யாழ்ப்பாணத்தில் சிறந்த பத்திரிகைகள் அவசியம். இல்லையேல் தென்னிந்தியப் பத்திரிகைள் நம் நாட்டில் குவிந்து நமது நல்ல தமிழை அழித்து விடும்."

இவ்வாறு முன்னாள் சிவில் சேவை உத்தியோகத்தர் திரு. மு. வைரமுத்து 'கலைச்செல்வி' நான்காவது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசும் போது குறிப்பிட்டார். 'கலைச்செல்வி' நான்காவது ஆண்டு நிறைவு விழா கடந்த திங்கட்கிழமை மாலை பொங்கல் திருநாளில் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்றது. திரு. என். கே. பத்மநாதன் கோஷ்டியாரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமானது. நகரமண்டபம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கலைச் செல்வி ஆசிரியர் திரு. சி. சரவணபவன் தமது வரவேற்புரையில் 'கலைச்செல்வி' கலைத்தொண்டுக்கு ஊக்கமளித்து வரும் அனைவர்க்கும் நன்றி செலுத்தியதோடு கலைச்செல்வியின் எதிர்காலப்பணிகளையும் எடுத்துக்கூறினர்.

### கலையின் தனிச்சிறப்பு

திரு. வைரமுத்து மேலும் பேசியதாவது:-

இந்த உலகில் வாழும் பல்வேறு பட்ட மக்கள் பிரிவிலிருந்தும் தமிழர்களைப் பிரித்துச் சிறப்பித்துக் காட்டுவது அவர்களது கலையாகும். உண்ண உணவின்றியிருந்தாலும் கலை வளரவேண்டுமென்ற ஆர்வமும் பண்பும் கொண்டவர்கள் தமிழர்கள். நமது கலையும் பண்பாடும் வளர நமது சமுதாயம் தானே வளர்ச்சியுறும். இலக்கியக்கலை மனித வாழ்வின் அடிப்படை அம்சமாக அமைந்து விட்டால் அது உயர்ந்த வாழ்வுக்கு மனிதனை இட்டுச் செல்லும்.

கடந்த 150 வருட காலமாக அந்நியர் ஆட்சியின் போது நமது கலைகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மறைந்து கிடந்தது. இன்று அந்நிலைமை மாறி ஓரளவு சுதந்திர நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் கலை வளர்ச்சி பெற வாய்ப்புகள் தோன்றியுள்ளன.

நமது இனம் பல வகையிலும் தாழ்ந்து நசுக்குண்டு வாழ்கிறது. இந்நிலைமையிலிருந்து விழித்தெழ, உணர்ச்சியைத் தட்டியெழுப்ப கலை ஆர்வத்தை மக்களிடையே வளர்ப்பது அவசியம். கலை பண்பாட்டை வளர்க்கவேண்டும். அது மக்கள் வாழ்வில் செறிந்து புத்துணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

### பத்திரிகைகளை வளர்க்கவேண்டும்

பத்திரிகைளின் எண்ணிக்கை புற்றீசல்போல் காணப்படுகிறது. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை ஏற்படுவது வழக்கமாகிவிட்டது. குறைந்த தொகையில் சில பத்திரிகைகள் தரமான முறையில் வந்தால் அதுவே சிறப்பாக இருக்கும். போர் உணர்ச்சி நெருக்கடியை ஏற்படுத்தி விடும். சக்தியை ஒன்று படுத்தி ஒற்றுமையுடன் சகலரும் பணியாற்றி யாழ்ப்பாணத்தில் தரமான சில பத்திரிகைகளை வளர்க்க முற்பட வேண்டும்.

எழுத்தாளர்களிடையே இப்பொழுது பிரச்னைகள் பல எழுந்துள்ளன. பிரச்னைகள் வருவது சிக்கல்களைத் தீர்த்துத் தெளிவை ஏற்படுத்தவே. அதற்குப்பதில் மண்டையை உடைத்து விடக்கூடாது!

யாழ்ப்பாணம் மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில், இலங்கைத் தமிழர்களின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் கலைவளரும் பத்திரிகைகளை ஆதரித்து வளர்க்க வேண்டியது அவசியமென்றாலும், இன்றைய நிலையில் பொருளாதார விருத்தியில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கூறினர்.

'கலைச்செல்வி' ஆண்டுமலர் வெளியீட்டை ஆசிரியர் இராஜ அரியரத்தினம் ஆரம்பித்துவைத்தார்.

கலாநிதி ஏ. சதாசிவம் வாழ்த்துரை வழங்குகையில், நன்மையைச் செய்கிறவர்கள் பிரச்னைக்குரியவர்களாக மாற்றப்பட்டு விடுகிறார்களென்றும் பத்திரிகைகள் பொருளீட்டம் அதிகம் கிடைக்காவிடினும் பண்பாட்டையும் கலையையும் வளர்ப்பதில் முன்னின்று உழைக்க வேண்டுமென்றும் அவற்றைப் பொதுமக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும் சொன்னர்.

பண்டிதர் க. வீரகத்தியும் வாழ்த்துரை வழங்கினர்.

சிறுவர் மிருதங்க அரங்கேற்றமும், நல்லூர் நந்திகேஸ்வர நாட்டியாலயத்தின் திருமதி லீலா சத்தியலிங்கம் குழுவினரின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

# யாழ். மாநகரசபை குழுக்கள் தெரிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

வெள்ளிக்கிழமைநடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் இவ்வருடத்திற்கான நிரந்தரக் குழுக்கள் தெரிவு நடைபெற்றன. விபரம் பின்வருமாறு:-

நிதிக்குழு: மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம், ஹாஜி வி. எம். எம். அபுசாலி, திருவாளர்கள் ஏ. நடராசா, ஜே. எஸ் அழகையா. எஸ். இராசரத்தினம், ஏ. துரைராசசிங்கம்.

சுகாதாரக்குழு: திருவாளர்கள் பி. எஸ. சோமசுந்தரம், டி. எஸ். துரைராசா, பி. எம். ஜோன், ஏ. துரைராசசிங்கம், எம். ஜேக்கப், காதி எம். எம். சுல்தான்.

மின்சாரக்குழு: திருவாளர்கள் ஏ. துரைராசசிங்கம், கே. எஸ். நடராசா, ஜே. எஸ். அழகையா, என். டி. செல்லத்துரை, ஏ. நடராசா, பி. எம். ஜோன்.

மராமத்துக்குழு: காதி எம். எம். சுல்தான், திருவாளர்கள் டி. எஸ். துரைராசா, எம். யேக்கப், என் தேவபாலசுந்தரம், பி. எஸ். சோமசுந்தரம், என். செல்லத்துரை.

நிதிக்குழு தெரிவின்போது சபையில் வெவ்வேறுபிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. மேயர் வாக்கெடுப்பில் முறையாக நடந்துகொள்ளவில்லையெனத் தெரிவித்து திரு. ஏ. ஜி. இராஜசூரியர் சபையிலிருந்து வெளியேறினர். இதனால் எந்தக்குழுவிலும் தம் பெயரைத் தெரிவு செய்ய அவர் மறுத்துவிட்டார்.

---

கொழும்பு, புதன்

கல்வி அமைச்சின் வேலைப் பளுவைக் குறைப்பதற்காக உதவிக் காரியதரிசி பதவி ஒன்றைப் புதிதாக ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டுக கலாச்சார அமைச்சில் சிரேஷ்ட உதவிக் காரியதரிசியாக இருந்துவரும் எம். ஜே. பெரேரா இப்பதவிக்கு அநேகமாய் நியமிக்கப்படக்கூடுமென்று தெகிறது.

# விசாரணை வேண்டும்

## காங்கேசன்துறை கட்சிக் கிளை கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி இலங்கரத்தின வடபகுதிக்குச் சமீபத்தில் விஜயஞ் செய்த போது, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் அரசாங்கத்திற்கு தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டும் வகையில் அமைதியான முறையில் நடைபெற்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் பொலிசார் மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்தியதைக் கண்டிப்பதுடன் தகுந்ததொரு விசாரணைக் குழுவை நிறுவி ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமென்று இலங்கை தமிழரசுக் கட்சியின் காங்கேசன் துறைக்கிளை நிறைவேற்றியுள்ளது. திரு. ஆ. தெட்சணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சுதந்திரதினத்தை துக்கதினமாக அனுஷ்டிப்பதெனவும், காங்கேசன்துறையில் மக்கள் வங்கிக் கிளையைத் திறந்துவைக்க எந்த அமைச்சரோ அன்றி அவரது செயலாளர்களோ வருகைதரின் கட்சியின் தலைமைப் பீடத்தின் ஆணைப்படி அமைதியாக கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

காங்கேசன் துறைப் பட்டின சபையில் உள்ள நூல்நிலையம் அலுவலக நேரத்தில் மட்டுமன்றி இரவு எட்டுமணிவரை திறந்திருக்க வேண்டுமெனவும் பொழுது போக்குக்காக கோட்டை மைதானததில் வைக்கப்பட்டுள் ஒலி பெருக்கி எடுக்கப்பட்டு விட்டமையால் விரைவில் அதனை உபயோகத்திற்குக் கொண்டு வரும்படியும் இக் கிளை காங்கேசன் துறை பட்டினசபையைக் கேட்டுக் கொண்டுள்ளது.

---

# நூல்நிலையக் கமிட்டி புதிய உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபை மாதாந்தக் கூட்டத்தில் பொதுசன நூல் நிலையத்திற்கு நடப்பு வருடக் குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்:-

திருவாளர்கள் ஜே. எஸ். பி. செல்லத்துரை, ஏ. விஸ்வநாதன், ஜே. சிக்மனசிங்கம், எஸ். கதிரவேற்பிள்ளை, எஸ். சி. மகாதேவா, சி. பொன்னம்பலம், எஸ். கனகரத்தினம்,

எஸ். சிவபாதசுந்தரம், ஏ. ஜே. காசிப்பிள்ளை, ஏ. டி. துரையப்பா, கே. கணேசலிங்கம், டி. சீனிவாசன், டி. பானுதேவன், டாக்டர். கே. சி. சண்முகரத்தினம், ஜனுப் எஸ். எச். எஸ். சாகீது.

இவர்களுடன் மாநகரசபை அங்கத்தவர் 15 பேர் உட்பட மொத்தம் 30 பேர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

---

# மாநகரசபை அனுதாபம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அர்பன்சபை அங்கத்தவரும் யாழ்ப்பாணம் எம். பி. யின் தகப்பனருமான திரு. ஏ. வி. துரையப்பாவின் மரணத்திற்கு அனுதாபந் தெரிவிக்கும் தீர்மனம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இரு நிமிடம் மௌனமும் அனுட்டிக்கப்பட்டது.

இதற்கான பிரேரணையை ஹாஜி. வி. எம். எம். அபுசாலி கொண்டுவந்தார்.

# இந்தியாவுக்கு அனுப்பும் தமிழ் விலாச கடிதங்கள்

## பிரதிநிதிகள் சபைக்குவரும் கேள்வி

கொழும்பு, புதன்

பிரதிநிதிகள் சபை அடுத்த வியாழனன்று கூடும்போது இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தபால்கள் அனுப்புவது சம்பந்தமாக தபால் பகுதி முதல் அதிகாரி சில நாட்களுக்கு முன் விடுத்த ஒரு சுற்றறிவித்தல் பற்றி டாக்டர் என். எம். பேரேரா போக்குவரத்து அமைச்சிடம் விளக்கம் கோரி ஒரு கேள்வி விடுக்க முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

இந்தியாவுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் விலாசமிடப்பட வேண்டும் என்று தபால் இலாகா முதல் அதிகாரி ஒரு சுற்றறிக்கை விடுத்திருப்பதை அமைச்சர் அறிவாரா? தமிழில் விலாசமிடப்படும் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த நீண்ட கால வழக்கத்தை தபால் இலாகா நிராகரித்து விட்டதற்கு அமைச்சர் விளக்கம் கூறுவாரா?

இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்ததைப் போல தமிழ், ஆங்கிலம் இரு மொழியிலும் விலாசமிடப்படும் தபால்களை ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சர் உடனடியாக கவனித்து ஆவன செய்யவேண்டும் என்றும் டாக்டர் பெரேரா கேட்டுக் கொள்வார்.

### யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் எண்ணிக்கை

கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. ஏ. சிவசுந்தரம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை பற்றி கல்வி அமைச்சரிடம் ஒரு கேள்விக்கு விளக்கம் கேட்க முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

யாழ்ப்பாண நாடெங்கிலுமுள்ள ஆசிரியரின் பெருந்தொகையான எண்ணிக்கை விபரங்களை கல்வி அமைச்சர் அறிவாரா? இந்நிலைமை வித்தியாபகுதியின் ஆசிரியர் இடமாற்றப் பகுதியாரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட போது அதன் மீது எந்த விதமான நடவடிக்கை எடுக்கப் படாததும் அதற்கு ஒரு பதில் குறிப்புக்கூட அனுப்பாமல் விட்டதும் அமைச்சருக்குத் தெரியவருமா?

மேலும் கிளிநொச்சித் தொகுதியில் தலைமை ஆசிரியர் ஒருவர் இல்லாமலே இரண்டு வருட காலத்துக்கு மேலாகப் பாடசாலைகள் நடைபெற்று வரும் புதினமும் அமைச்சருக்குத் தெரியுமா என்றும் திரு. சிவசுந்தரம் கல்வி அமைச்சரிடம் கேட்பார்.

---

# புத்தர்சின்னம்கொண்ட முடைகள்

## இறக்குமதிக்குத் தடை?

கொழும்பு, திங்கள்

புத்தரின் சிலையுடனும், 'புத்தா சின்னம்' என்ற வார்த்தையுடனும் கொண்ட, இறக்குமதிசெய்யப்பட்ட 105 மஞ்சள முடைகளை சுங்கப்பகுதியினர் தடுத்து வைத்துள்ளனர். இது சம்பந்தமாக இறக்குமதிசெய்தவர்கள் தெரிவிக்கையில், 'புத்தரின் சிலையும், புத்தர் சின்னம்' என்ற வார்த்தையும் மஞ்சள் முடைகளில் பொறிக்கப்பட்டிருப்பது இலங்கையிலுள்ள பௌத்தமக்களின் மனதைப் புண்படுத்தாதென்றும், இலங்கையிலுள்ள இந்துக்களின் தேவைகளுக்காகவே தான் மஞ்சள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதென்றும், இலங்கை ஒரு பௌத்தநாடு என்ற காரணத்தினால் மக்கள் இதை மகிழ்வுடன் வாங்குவார்கள் என்ற நம்பிக்கையின் பேரிலேயே மஞ்சள் முடைகளிலும், பைகளிலும் புத்தரின் சிலை பொறிக்கப்பட்டதென்றும் கூறினர்.

ஆசிரியருக்குக் கடிதம்

# கோவளம் வீதி

எனது கிராமமாகிய காரைநகரில் கோவளம் வீதியும் பிரதானமானது. வார்தாப் பள்ளிக்கூடம், சிவஞானோதய வித்தியாசாலை, முருகன் கோவில், கலங்கரை விளக்கம் ஆகியவற்றுடன் தொடர்புள்ளதுமல்லாமல் சன நெருக்கம் மிகுந்த பகுதிகளுடனும் இவ்வீதி தொடர்புடையதாகும். இவ்வீதி மிகவும் கேவலமான நிலையில் காட்சியளிக்கின்றது மழை பெய்தாலும் வீதி முழுவதும் சேறும் சரியுமாகவே காட்சியளிக்கின்றது.

கிராமத் தலைவரும், கிராம சபையினரும் இதுசம்பந்தமாக ஆவன புரிவார்களென எதிர்பார்க்கிறேன்.

ஆ. ப சோதி,
காரைநகர்.

---

# தொழில் பயிற்சி பெற்ற மாணவிகள்

## வேலையின்றி தவிப்பு

கொழும்பு, செய்வாய்

வல்பிட்டி, லபுடுவை அரசாங்க கமப்பண்ணைகளில் கமத் தொழிலிலும், கால்நடை வளர்ப்பு, குடும்பக் கலை ஆகியவற்றிலும் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான படித்த பெண்கள் வேலை கிடைக்கப்பெருமல் நாட்களை வீணே கழித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சங்கீதத்திலும் நாட்டியத்திலும் பயிற்சி பெற்ற எஸ். எஸ். ஸி. தராதரமுள்ள ஏனையோர் பாடசாலைகளில் உதவி ஆசிரியைகளாக நியமனம் பெற்றிருப்பதை இவர்கள் குறிப்பிட்டுக் காட்டி அரசாங்கம் லட்சக் கணக்கில் பணத்தைச் செலவிட்டுத் தங்களைப்போல் நூற்றுக் கணக்கான மாணவிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காகக் கமத்தொழில் பண்ணைகளை வைத்து நடத்துவது முடிவில் யாருக்குமே பலனற்றுப் போய்விடுகிறது என்று கூறுகின்றனர். தாங்கள் பெற்ற பயிற்சி பிரயோசனப்படக் கூடிய அரசாங்க ஸ்தாபனங்களில் இவர்கள் தங்களுக்கு வேலை கோருகின்றனர். இதற்கு தேயிலை, ரப்பர், தென்னை ஆராய்ச்சி ஸ்தாபனங்களை உதாரணமாக இவர்கள் காட்டியிருக்கின்றனர்.

---

# சனசமூகநிலைய சமாஜவிழாப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணமாவட்ட சனசமூக நிலையச் சமாசவிழாப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்கும்கடைசித் திகதி இம்மாதம் 31-ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. விழாப்போட்டி விண்ணப்ப முடிவு முன்னர் டிசம்பர் 31-ம திகதியெனவிருந்தது. சமாச மத்திய கமிட்டி இத்திகதியை ஜனவரி 31-ம் திகதிவரை ஒத்திவைப்பதென முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள் இது சம்பந்தமாக திரு. ஈ. கே. குமரையாவுடன் தொடர்பு கொள்ளவேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

# ‘உள்ளத்தின் வளர்ச்சியுடன் இலக்கியமும் வளரும் அங்குபூசல்களுக்கே இடமில்லை’

## சாகித்திய விழாவில் உதவி வித்தியாதிபதி பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

“ஒரு நாட்டின் இலக்கியம் மக்கள் சமூகத்தின் வளர்ச்சியைப் பொறுத்தே வளர்ச்சி பெறுகிறது. இலக்கியத்தின் வளர்ச்சியே சமூகத்தின் வளர்ச்சி என்றும் கூறலாம். மாணவர்கள் பலதுறைக் கல்விகளில் ஈடுபட்டாலும் தமிழ் இலக்கியத்துறையில் அவசியம் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்” என்று வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் அகில இலங்கை சாகித்திய மண்டல ஆதரவில் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ் இலக்கிய விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இலக்கியத்துறையில் மரபு இருத்தல் உண்டு. இலக்கியம் வளர்ப்பதில் கல்விப்பகுதியினரும் தொடர்பு கொள்ளுதல் அவசியம். தமிழ் இலக்கியம் எவ்வாறு வளரவேண்டும் என்பதுபற்றி சிந்திக்கவேண்டும். இலக்கியத்துறையில் பூசல்களுக்கு இடமேயில்லை. எவ்வளவு வேகமாக உள்ளங்கள் வளருகின்றனவோ அவ்வளவு வேகத்துடன் இலக்கியமும் வளரும். தமிழனின் நிலையை இலக்கியத்துறையிலே ஆராயவேண்டும். கல்வித்துறையில் உள்ளவர்களும் ஆசிரியர்களும்தான் மாணவர்களை இலக்கியத்துறையில் ஈடுபடுத்தவேண்டும். நாம் பிள்ளைகளுக்கு எவ்வித கல்வி புகட்டுகின்றோமோ அந்த நிலையையே அவர்கள் அடைய முடியும். பாடசாலைகளிலும் பிள்ளைகள் இலக்கியமரபுககமைய கல்வி கற்கவேண்டும். எம்மால் இயன்றளவு பிள்ளைகள் புதுப்புது வழிகளில் சென்று இலக்கியப் பயிற்சி பெற வழி செய்யவேண்டும்.

பாடசாலைகளில் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பமும் ஊக்கமும் அளிக்கப்படவேண்டும். நாட்டின் இலக்கியநிலையைமாணவர்களின் தாய்மொழி அறிவைக் கொண்டு அறியலாம்.

### பல மொழிகள் கற்கவேண்டும்

பல பாஷைகள் கற்கவேண்டும். பல மொழிகள் படிப்பவர்கள் எழுத்தாளர்களாக வரமுடியும். எமது பிள்ளைகள் தமிழுக்கு உதவியாக உள்ளமொழிகளைக் கற்கவேண்டும் வடமொழி படிப்பதினால் தமிழில் நல்ல தேர்ச்சியடைய முடியும் சமஸ்கிருதம் கற்றவர்கள் நிச்சயமாகத் தமிழிலும் ஆற்றலுள்ளவர்களாக இருப்பார்கள். எமது பிள்ளைகளைப் பல மொழிகள் கற்கத் தூண்டவேண்டும்.

ஆற்றலிற் கூடியவர்கள் விஞ்ஞானக் கல்விபெற விரும்புகின்றனர். இலக்கியத்துறையிலும் ஊக்கமளிக்கப்பட்ட பின்னரே விஞ்ஞானக் கல்வி பெறவேண்டும் எமது சமூகம் ஒரே துறையில் செல்லுமானால் ஏனைய துறைகள் கவனிப்பாரற்றுப் போய்விடும் இலக்கியம் சமூகத்துடன் வளர்கிறது. சமூகத்தின் வளர்ச்சியே இலக்கிய வளர்ச்சியாகும். நாட்டிலுள்ள மரபுகளை அழிக்க முயலக்கூடாது. எல்லாத்துறைகளையும் வளர்ப்படுத்தி இளைஞர்களை இலக்கியத்துறையில் பயன்படுத்தவேண்டும்.

பலாலி அரசினர் ஆசிரியபயிற்சிக் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை ‘கவிதையின் அவசியம்’ என்பதுபற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

“கவிதை சக்திவாய்ந்தது. பரம்பொருளில் மேம்பட்டது கவிதை. கவியினால் இறைவனை அடையலாம். கவிதையைவிட உலகத்தில் சிறந்தது எதுவுமில்லை. இன்று பலரும் கவிதைகள் இயற்றுகின்றார்கள். இன்று மாணவர்களுக்கு ஆராய்ச்சி முன்னும் படிப்பு பின்னுமாகஉள்ளது. ஆரம்பக கல்வி சரியாகப் பெருமையே இதற்குக் காரணமாகும். பெரியோர்களின் பாடல்களைப் படிக்கவேண்டும். நல்ல கவிதை படிப்பதினால் நல்லபண்பாடுகள் தோன்றும். மனிதனின் அவலநிலைக்குக்காரணம் நல்லாரின் தொடர்பு இல்லாமையே. நல்ல புலவர்களின் பாடல்கள் உள்ளத்தைக் குளிரச்செய்கின்றன. மரபு ஒட்டியே பெரும் புலவர்கள் பாடல்கள் பாடினார்கள். எமது நாட்டுப்புலவர்களின் பாடல்களை நமது பிள்ளைகள் படிக்கவேண்டும். கவிஞனின் சிறந்த இலட்சியம் சொல்ல வந்த விஷயத்தை சோல்லாமலே விளங்கவைத்தலாகும்.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் தமிழின் சிறப்பியல்புகள் என்பது பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

### அன்பு ஆன்மீகம் உள்ளது தமிழ்

தமிழின் வளர்ச்சி பற்றிய அபிப்பிராயங்கள் பல்வேறு கோணங்களிலும் ஆராயப்படுகின்றன. தமிழைக் கற்கவேண்டும் என்று எண்ணிவிட்டால் மட்டும் போதாது. நம்முடைய மொழியை நாமே வளர்க்கவேண்டும். உலக மொழிகளில் ஆத்மீக நெறியுடையதும் அன்பை நிலைக்களனாகக் கொண்டதும் நமது தமிழ் மொழியே ஆத்மீக சிந்தனையை உலகமெங்கும் பரப்பவேண்டும். மனிதன் எவ்வாறு சிந்திக்கவேண்டும் என்பதனை மொழி வழிகாட்டுகின்றது. முறையாக நாம் தமிழைக் கற்காமையினால் பாரம்பரியமான சிந்தனைகளை அழிக்கமுயல்கின்றோம். பெரியோர்கள் சிந்தனையை ஒதுக்கிவிட்டு நமது சிறிய உணர்ச்சிகளை மேலோங்கச்செய்ய முயலுகின்றோம். எல்லா மொழிகளிலும் இல்லாத பொருள் இலக்கணச்சிறப்பு தமிழுக்கு உண்டு. பொருளைப் பற்றிய ஆராய்ச்சி பண்டுதொட்டே நடைபெற்று வருகின்றது. மனித வாழ்க்கை பரம்பொருளையே நாடிச் செல்லுகின்றது. அன்பு, மெய்ப்பொருள் போன்ற விஷயங்களை நாம் அடைய மெய்ந் நெறி வழி காட்டவேண்டும். பொய்யடிமையில்லாப்புலவர்கள் பாடிய பாடல்கள் மிகச்சிறந்தவை தமிழின் பாரம்பரியமும், ஆத்மீகவலிமையும் பாதுகாக்கப்படவேண்டும். தரமற்ற இலக்கியங்கள் நாட்டில் பெருமளவில் விற்பனையானாலும் அவற்றையிட்டுக் கவலைப்படக்கூடாது. இலக்கியம் புறக்கணிக்கப்படுகிறது. உலகியலில் விஞ்ஞானக் கல்வி பலன் தருவனவாயிருந்தாலும் தமிழ் இலக்கியக் கல்வியும் வேண்டும். சமுதாயத்தில் விஞ்ஞானக் கல்விக்குரிய இடம் தமிழ் சமயக் கல்விகளுக்கும் வழங்கப்படவேண்டும். உலகாயத சக்திகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கவேண்டும்.

### காளிதாசனும் இலங்கையும்

நவாலியூர் திரு. சோ. நடராஜன் திரு சு. நடேசபிள்ளை இயற்றிய ‘சாகுந்தலம்’ என்னும் நூலை அரங்கேற்றி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

‘காளிதாசனுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இலங்கைப்புலவர்கள் காளிதாசருடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். காளிதாசரின் நூல்களை இலங்கைப் புலவர்களே மொழிபெயர்த்தவர்களாகும். வடமொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்படும் மரபு இலங்கையிலே உண்டு. சகுந்தலை வெண்பாவும், பகவத் கீதை வெண்பாவும் வெண்பா அமைக்கும் முயற்சியில் பெரும் வெற்றி பெற்றுள்ளன. இது போன்ற பல நூல்கள் உண்டாக வேண்டும். உயர்ந்த இலக்கியங்கள் நீண்டகாலமாக மக்களுடன் உறைந்து வாழவேண்டும்.

சகுந்தலை வெண்பாவை ‘இசைக்குரிசில்’ திரு. சி. செல்லத்துரை படிக்க, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆசிரியர் திரு செ. கதிரேசர் பிள்ளை பொருள் உரைத்து அரங்கேற்றினர்.

# ‘நேரத்தை வீணாக்குகிறோம்’

## சாகித்தியவிழாவில் அதிபர் கவலை

சாவகச்சேரி, திங்கள்

தமிழர்கள் கடினஉழைப்புக்குப்பெயர் போனவர்கள். ஆனால் இப்பொழுதுநாம் நமது எஞ்சிய நேரங்களை சந்தியிலோ அல்லது கடைகளிலோ கூடி வீணான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வீணாக்குகின்றோம். நல்ல கருமங்களை உதாரணமாக தமிழ் இலக்கியத்துக்குத் தேவையான படைப்புக்களைப் படைக்குமாறு கோரப்பட்டால் நாம் நேரமில்லை என்று கூறிவிடுகின்றோம்.

இவ்வாறு ட்றிபேர்க்கல்லூரி அதிபர் திரு. ஏ கே. சபாபதிப்பிள்ளை சாகித்திய தினத்தை முன்னிட்டு ட்றிபேர்க் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சபாபதிப்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:

பெற்றோரின் போதிய கண்காணிப்பின்றி பிள்ளைகள் இன்று மலிவான விலையில் விற்கப்படும் தரம்குறைந்த புத்தகங்களைப் படித்து வருகிறார்கள் இதனால் நல்ல பழக்க வழக்கங்கள் தேய்ந்து வருகிறது. பொறாமை, வெறுப்பு, சுயநலம் இவை நமது சமூகத்தில் பரவிக்காணப்படுகின்றன. எந்த கூட்டுறவுறவு சங்கத்தை நாம் புகழ்கின்றோமோ அந்த சங்க கூட்டுறவுக்கு நேர்விரோதமான செயல்களில் ஈடுபடுகிறது.

இந்தவித குறுகிய மனப்பான்மைகள் தமிழரிடையே முன்னர் இருந்திருக்கவில்லை. சகிப்புத்தன்மை, சமாதான வாழ்வு பரஸ்பர உதவி இவைதான் தமிழினத்தை பெரியதொரு இனமாக்கியது

சுதந்திரத்துக்குப் பின்னர் தோன்றிய தேசியமயம் எமது முகத்தில் அடித்துவிட்டது நாம் மேல்நாட்டு நாகரீகத்தை வெறுக்கத் தொடங்கியதோடு ஆங்கிலத்தையும் அகற்றமுற்பட்டுள்ளோம். உலக அறிவைப்பெற நமக்கு ஆங்கிலம் எவ்வளவு உதவுகிறது என்பதை நாம் மறந்துவிட்டோம்.

எமது தாய்மொழியில் உருவாக்கப்பட்ட இலக்கியங்களைப் பாதுகாத்து வளர்ப்பதில் நாம் தீர்மானமான முயற்சி செய்யவேண்டும்.

பண்டிதர் சோ. இளமுருகனார் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையில் தமிழ் அன்னையை அரசுகட்டிலில் ஏற்றி வைத்தற்குரிய முயற்சிகளில் இலக்கிய விழாக்கள் எடுத்தலும் ஒன்று.

### சாகித்தியமும் பேரவையும்

சாகித்தியம் என்பது வடசொல். அதற்குப் புலமை, இலக்கியம், பாட்டு என்பன பொருளாகும்.

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேபாண்டி நாட்டிலே ஒரு சாகித்திய மண்டலம் நிலவியது அதற்கு பேரவைஎன்றும் இலக்கியப் பேரவை என்றும் பெயர். அப்பேரவையில்தான் தொல்காப்பியம் என்னும் பெருநூல் அரங்கேற்றப்பட்டது.

இந்த சாகித்திய மண்டலத்தின் மூலமாவது தமிழிலக்கிய வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமென நான் கருதுகின்றேன்.

# ‘மரபு அறிந்து எழுதுதல் அவசியம்’

## சாகித்திய விழாவில் முதலியார் சின்னத்தம்பி

யாழ்ப்பாணம், புதன்

‘எழுத்தாளர்களின் படைப்புகள் உலகத்திற்குப் பயன்படவேண்டுமானால் மரபு நன்கு அறிந்து எழுதப்படுதல் மிகவும் அவசியமாகும். இலக்கிய மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் அனுபவசாலியாக இருந்தும் அவர்கள் தமது அனுபவத்தை எழுத்தில் வெளியிடுவதில் தவறுகிறார்கள். இதுவே அவர்கள் முன்னேற்றமடையாமலிருப்பதற்குரிய காரணமாகும்’ என்று முதலியார் செ. சின்னத்தம்பி யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். ஞாயிறு மாலை நிகழ்ந்த இவ்விழாவில் திரு சின்னத்தம்பி தொடர்து பேசியதாவது:- ‘மறுமலர்ச்சியின் பெயரால் நம்மிடையே பல பிரச்னைகள் தோன்றியிருக்கின்றன. இலக்கியப் பிரச்னை குறிப்பிடத்தக்கதொன்று. அரசியல் தொடர்பு நம்மிடையே அதிகரித்துவிட்டகாரணத்தால் உயர்ந்த சிந்தனைகளுக்கு இடமில்லாதுபோய்விட்டது. இலக்கியத்தின் பாரம்பரியத்தையும் மரபையும் பேணிக்காக்கவேண்டிய நிலையிலே நாமிருக்கின்றோம். இலக்கியம், கலை முதலானவை அனுபவத்தினால் தோன்றுவன. இலட்சியத்தைக்கொண்டே அவை ஆக்கப்படுகின்றன. இலக்கிய அடிப்படை நோக்கை இன்றைய இலக்கிய கர்த்தாக்கள் நன்கு உணரவேண்டும்.

புதுமையின் பெயரால் பல விதமான காரியங்கள் கையாளப்படுகின்றன. இதனைத் தவிர்க்க வழிதேடுதல் அவசியமாகும். துவேஷமற்ற நிலையிலேயே இதனை ஆராயவேண்டும். இலக்கியம் படைப்பதற்கு அனுபவம்மட்டும் இருந்துவிட்டால் போதாது. அதற்கான ஆற்றலும் அமைந்திருக்கவேண்டும். நமது முன்னோர்கள் இந்த ஆற்றலை நமக்குக் காட்டியிருக்கிறார்கள். இந்த வழியில் இலக்கியம் படைக்கப்பட்டால்தான் படிப்பவர்கள் சுவைக்க முடியும்.

மறுமலர்ச்சி இலக்கியம் படைப்பவர்கள் உலகத்தவர் பயனடையத்தக்கவகையில் எழுதாமைக்கு மரபு பொருட்படுத்தப்படாமையை காரணமாகக் குறிப்பிடலாம். இது அவர்களுடைய தவறேயன்றி வேறில்லை. அவர்களை நாம் ஒதுக்கிவிடுவதனால் அவர்கள் பின்தள்ளப்படுகின்றனர் என்று கூறுவது சரியல்ல. அவர்கள் தமிழ் ஆற்றலை மரபு பேணுவதில் நிறைவுபடுத்தவேண்டும்.

மக்கள் இலக்கியம் என்று ஒருசாரார் சொல்லிக்கொள்கிறார்கள். இம்மக்கள் ஆட்சி இலக்கியத்திற்கு ஒருபோதுமே சரிவராது. அரசியல் பொருளாதாரம் முதலிய விஷயங்களில் மக்கள் ஆட்சி பொருத்தமானதாக இருக்கலாம். இலக்கியத்தைப் பொறுத்தவரையில் அனுபவத்திற்கு முக்கியத்துவமளிக்கப்படவேண்டும்.

பாமர மக்களைத் திருப்திப்படுத்துவது என்ற நோக்குடன் தரமற்ற இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. இலக்கியம் மக்கள் நிலையை உயர்த்துவதற்காகவேயன்றி அவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு அல்ல. அறிவும் ஆற்றலும் ஏற்றவழியில் பயன்படுத்தப்படவேண்டும்.

பண்டித வ. நடராசா ‘இக்காலத் தமிழ் நடை’ என்பது பற்றிப் பேசுகையில் புதிய இலக்கியம் படைப்பவர்கள் பழைய இலக்கியங்களைப் படிப்பதினால் தரமான இலக்கியங்களைப் படைக்கமுடியுமென்றும் பழைமையை பேணுவோர் புதிய இலக்கியங்களைப் படிக்கத் தவறக்கூடாதென்றும் தற்போதைய வசனநடை மொழிபெயர்ப்பாளரால் கொடுக்கப்பட்டுவருகின்றதென்றும் குறிப்பிட்டார்.

### யதார்த்தம் புதியதல்ல!

திரு. க. தி. சம்பந்தன சிறுகதையிலக்கியம்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

‘காலத்தால் அழியாத நிலையில் இலக்கியம் படைக்கப்படவேண்டும் என்பதனை இன்றைய இலக்கிய கர்த்தாக்களில் ஒரு பகுதியினர் உணர்ந்துகொள்ளவில்லை. பழக்க தோஷத்தினால் அவர்கள் சிருஷ்டிப்பவை மிக விரைவிலேயே அழிந்துவிடுகின்றன. சீரிய பண்பட்ட உள்ளத்தில் தோன்றிய கருத்துத்தான் இலக்கியமாகப் பரிணமிக்கின்றது. இம்மாதிரியான நிலையிலேதான் சிறுகதைக்கான கருத்துக்களும் தோன்றுகின்றன என்பதனை முற்றாக ஒப்புக்கொள்ள இயலாது. புதுமை எழுத்தாளர்கள் புதுமைப்பித்தனின் வழியையே கையாளுகிறார்கள் என்பதனை ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டேன். யதார்த்தம் நமக்குப் புதியது அல்ல. உள்ளதனை உள்ளபடியே சொல்லவேண்டுமென்பதற்காக ஆபாசத்தைக் கட்டவிழ்த்துவிடக்கூடாது. இதனால் சாதாரண மக்கள் மனத்தில் அழுக்கு புரையோடக்கூடும். இந்தப் பாவத்திற்கு எழுத்தாளர்கள் ஆளாகக்கூடாது.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பேசுகையில் இலக்கியங்களில் பெண்மை வழி வழியாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறதெனவும், அதிலும் குறிப்பாக சங்ககால இலக்கியங்களில் தனியானதோர் இடம் கிடைத்துள்ளதென்றும் கூறினர்.

திரு. பரம் தில்லைராஜாவின் இன்னிசை விருந்தும் கொக்குவில் கலாபவன மாணவிகளின் நடனவிருந்தும் விழாவில் இடம்பெற்றது. திரு. எஸ். டி. இளையதம்பி நன்றி கூறினர்.

உதயதாரகைமன்ற உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி

# சுன்னுகம் ரெக்கெற் கழகம் முதல்பிரிவுசாம்பியன்

## பண்டத்தரிப்பு கழகம் 2-வது பிரிவுச் சாம்பியனுகத் தெரிவு

குரும்பசிட்டி, செவ்வாய்

குரும்பசிட்டி உதயதாரகை மன்ற ஆதரவில் கடந்த ஒரு மாதகாலமாக பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெற்றுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பொங்கலன்று நடைபெற்ற சாம்பியன் போட்டியுடன் முடிவடைந்தது. பெருந் தொகையான உதைபந்தாட்ட ரஸிகர்கள் கண்டு களித்த இச்சாம்பியன் போட்டியில் சுன்னுகம் ரெக்கெற்விளையாட்டுக்கழக முதற்பிரிவுக் கோஷ்டியும் குப்பிளான் விளையாட்டுக் கழக முதற்பிரிவுக் கோஷ்டியும் கலந்துகொண்டன.

போட்டிஆரம்பமுதல் இறுதி வரையும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. போட்டி ஆரம்பமாகி ஐந்தாவது நிமிஷத்தில் சுன்னுகக் கோஷ்டித் தலைவர் திருச்செந்தூர் கொடுத்த ஒரு பந்தை அதே கோஷ்டியின் வலது உட்புற வீரர் கதிர்காமதாஸ் விரைவாகவும் சாதுர்யமாகவும் குப்பிளான் கோஷ்டிக் கோல் நிலையத்தை நோக்கிக்கொண்டு சென்று தமது கோஷ்டியின் முதற்கோலை அடித்தார். இதைத் தொடர்ந்து குப்பிளான் கோஷ்டியினர் உற்சாகமாக விளையாடியதால் அக் கோஷ்டியின் தலைவர் கணேசலிங்கம் சுன்னுகம் கோல் நிலையத்தை நோக்கிக்கொண்டு சென்ற பந்தை கோல்காப்பாளர் சாதுர்யமாகத் தடுத்தமையால் குப்பிளான் கோஷ்டிக்கு ஒருமூலைஉதை கிடைத்தது. இந்த மூலைஉதையை குப்பிளான்கோஷ்டி வீரர்கள் சரியாகப் பயன்படுத்தத்தவறிவிட்டனர். தொடர்ந்து குப்பிளான் கோஷ்டிவீரர்கள் இடைவேளைவரை பலத்த தாக்குதல் நடாத்தியபோதிலும் சுன்னுகம் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் இராமநாதன், சச்சிதானந்தன் ஆகியோர் திறமையாக விளையாடித்தாக்குதல்களை முறியடித்தனர். இதனுல் குப்பிளான் கோஷ்டியினர் இடைவேளைக்கு முன்னர் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் ஒரு கோலேனும் அடிக்கவில்லை. இடைவேளையின்போது சுன்னுகம் 1—0 கோல்களால் முன்னணியிற் திகழ்ந்தது.

இடைவேளையின் பின்னர் போட்டி திகில்மிக்கதாக அமைந்திருந்தது. குப்பிளான் கோஷ்டி திறமையாக விளையாடிய பொழுதிலும் கோல் அடிக்கும் திறமை முன்னணி வீரர்களுக்கிலாதிருந்தமையால் தமக்குக்கிடைத்த சந்தர்ப்பங்கள் பலவற்றை இழந்தனர். இதேநேரத்தில் சுன்னுகம் கோஷ்டியினர் தமது வெற்றியை உறுதிப்படுத்துவதற்கெனத்திறமையுடன் விளையாடி தபது கோஷ்டி வலது வெளிப்புறவீரர் வேலாயுதத்தின் மூலம் இரண்டாவது கோலைப் பெற்றுக்கொண்டனர். இதைத்தொடர்ந்து போட்டி முடிவடைவதற்கு ஐந்து நிமிடங்களிருக்கையில் சுன்னுகம் கோஷ்டியின் இடது உட்புறவீரர் குணராஜா தமது கோஷ்டியின் மூன்ருவது கோலை அடித்தார்.

போட்டியில் சுன்னுகம் ரெக்கெற்விளையாட்டுக் கழக முதற்பிரவுக் கோஷ்டி 3—0 கோல்களால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்து. இவ்வருடச் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டு திரு. நா. சிவப்பிரகாசம் அன்பளிப்புச் செய்த "சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை" சுவீகரித்துக்கொண்டனர். திரு. சி. தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர் வெற்றிக்கிண்ணம் இலங்கையிலுள்ள சோவியத் ரஷ்ய பதில் ஸ்தானிகரின் பாரியார் திருமதி ஸ்ரெப்பனேவினுல் அடுத்த மாதம் 12 திகதி குரும்பசிட்டியில் நடைபெறவிருக்கும் பரிசளிப்பு விழாவின்போது வழங்கப்படும். திரு. ஸ்ரெப்பனேவ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதே சுற்றுப்போட்டி அமைப்பின்கீழ் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற இரண்டாம் பிரிவு சாம்பியன் போட்டியில் பண்டத்தரிப்பு விளையாட்டுக்கழக இரண்டாம் பிரிவுக் கோஷ்டியும் ஏழாலை வடக்கு யூனைட்டெட் விளையாட்டுக்கழக இரண்டாம்பிரிவுக்கோஷ்டியும் கலந்துகொண்டன. பொங்கலன்று நடைபெற்ற இப்போட்டியில் பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகம் 3—1 கோல்களால் வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பமுதல்இறுதி வரை விரைவாகக் காணப்பட்டது. பந்து இரு கோல்நிலையங்களையும் நோக்கி மாறி மாறிச் சென்றுகொண்டே இருந்தது. போட்டி ஆரம்பமாகிய பத்தாவது நிமிஷத்தில் பண்டத்தரிப்புக் கோஷ்டியைச் சேர்ந்த வலது வெளிப்புற வீரர் இலட்சுமணசாமி தமது கோஷ்டியின் முதற்கோலை அடித்துக்கொடுத்தார். இதைத் தொடர்ந்து ஏழாலைக் கோஷ்டிக்குக் கிடைத்த பெனல்டி உதையை பவசிங்கம் திறமையாக அடித்துக்கோல் எண்ணிக்கையை சரிசமமாக்கினுர்.

முரட்டுத்தனமாக விளையாடிய காரணத்திற்காக பண்டத்தரிப்புக் கோஷ்டியைச் சேர்ந்த கிருஷ்ணதுரையும் ஏழாலைக் கோஷ்டியைச் சேர்ந்த சபாரத்தினமும் மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். இதன் பின்னர் போட்டி முடிவடைவதற்கு முன்னர் பண்டத்தரிப்புக் கோஷ்டியைச் சேர்ந்த விக்கிரமசிங்கம் தமது கோஷ்டிக்குக் கிடைத்த பெனல்டி உதையை தமது கோஷ்டியின் இரண்டாவது கோலாக மாற்றினுர். இடைவேளையின் போது பண்டத்தரிப்புக் கோஷ்டி 2-1 கோல்களால் முன்னணியிற் திகழ்ந்தது.

இடைவேளையின் பின்னர் போட்டியில் விறுவிறுப்புத் தட்டியது. எனினும் இருகோஷ்டிகளும் முரட்டுத்தனமாகவிளையாடலில் ஈடுபட்டமையால் இரு கோஷ்டிகளையும் சேர்ந்த இரு வீரர்களை மத்தியஸ்தர் எச்சரிக்கை செய்தார். இந்த நேரத்தில் முரட்டுத்தனமான விளையாட்டைக் கண்டு ஆத்திரமடைந்த உதைபந்தாட்ட ரசிகர்கள் மைதானத்திநுள்நிழைந்தனர். போட்டியை நடாத்த முடியாது மத்தியஸ்தர் போட்டியை நிறுத்தினுர். உடனேயே சுற்றுப்போட்டி அமைப்பாளர்கள் ரஸிகர்களை மைதானத்தை விட்டு வெளியேறும்வண்ணம் விடுத்த வேண்டுகோளை ரஸிகர்கள் ஏற்றுக்கொண்டு மைதானத்தைவிட்டு வெளியேறினர்.

எனவே தொடர்ந்து போட்டி நடைபெற்றது. போட்டி முடிவடைவதற்கு மூன்று நிமிடங்களிருக்கையில் பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகத் தலைவர் இலட்சமணசாமி தமது கோஷ்டியின் மூன்ருவது கோலை அடித்தார். இறுதியில் பண்டத்தரிப்பு 3-1 கோல்களால் ஏழாலைக் கோஷ்டியைத் தோற்கடித்து திரு. த. சுப்பிரமணியம் அன்பளிப்புச் செய்த குரும்பசிட்டி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். திரு. க. ஜெயராசசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

# அகில யாழ்ப்பாணம்

## அரியாலையிடம் தோல்வி

யாழ்ப்பாணம், புதன்

அகில யாழ்ப்பாணக்கோஷ்டிக்கும் அரியாலைக் கோஷ்டிக்குமிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் அரியாலைக் கோஷ்டி இரண்டு மேலதிக கோல்களால் வெற்றியீட்டியது.

அகில யாழ்ப்பாணக்கோஷ்டி-அரியாலைக் கோஷ்டிகளுக்கு முறையே சகோதரர்களான திரு. எஸ். கே. மகாலிங்கம், திரு. எஸ். கே. பரமலிங்கம் ஆகியோர் காப்டன்களாக இருந்தனர்.

இந்த ஆட்டத்தைக் கண்டு களிப்பதற்கு பெருந்திரளாக மக்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் கூடியிருந்தனர். இரு கோஷ்டிகளும் திறமையுடன் விளையாடியபோதிலும் அரியாலைக் கோஷ்டி 3 கோல்களையும், மற்றக்கோஷ்டி ஒரு கோலையும் போட்டுக் கொண்டன.

திரு. இ. சபாலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### கிறீன்பீல்ட் தோல்வி

குருநகர் யுனைட்டெட் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும் கிறீன் பீல்ட் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்குமிடையே பொங்கலன்று பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் குருநகர் யுனைட்டெட் 2-0 கோல்களால் வெற்றியீட்டியது.

யுனைட்டெட் கோஷ்டி முரட்டுத்தனமாக விளையாடியது. இதனுல் தரமுள்ள ஆட்டமாக அமையவில்லை. சில சந்தர்ப்பங்களில்மத்தியஸ்தரே முழிக்க வேண்டியளவுக்கு கோஷ்டிகள் முரட்டுத்தனமாக விளையாடிக் கொண்டன.

திரு. என். சோமசுந்தரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### ஜொலிஸ்டர் வெற்றி

பொங்கலன்று பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஜொலிஸ்டார் கோஷ்டியும் கிராஸ்கொப்டர் கோஷ்டியும் கலந்துகொண்டன. ஜொலிஸ்டார் 7-1 கோல்களால் கிராஸ்கொப்டரைத் தோற்கடித்தது.

திரு. என். நாகமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

---

கொழும்பு, திங்கள்

கசிப்புக்கு இப்பொழுது புதுப்பெயர் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கும்புருபிட்டியாபகுதியில்இந்தக் கசிப்புக்கு 'பார்லிமெண்டு சுதியா' எனப் பெயரிடப்பட்டுள்ளதாம்.

இந்தக் கசிப்பில் ஒரு கோப்பை அருந்தியதும் ஒருவர் நன்ருகவும் நீண்டநேரம் பேசமுடிவதாகும் இதனுல்தான் இதற்கு இப்பெயரிடப்பட்டதாகவும் இங்குள்ளகிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

பிரபல ஐ. ஆர். சி. க்கன் காடுகளில் இந்தக் கசிப்பைத் தயார் செய்வதாக நம்பப்படுகிறது.


**மாமைட் எனக்கும் என் குடும்பத்துக்கும் நற்சுகமும் பெலனும் தருகிறது.**



நாம் யாவரும் நன்ருய் சாப்பிடுகிருேம் அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிருேம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒருபாகமாக நீங்கள் மாமைட் தினசரி அருந்திவர வேண்டும்

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமாஞல் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும்பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க
விட்டமின்களை
ஏராளமாகக் கொண்ட
ஓர் காய்கறி ஆகாரம்.




**மாமைட்**

## புங்குடுதீவு மக்கள் சேவாசங்கம்

புங்குடுதீவு, செவ்வாய்

"தமிழர் சமுதாயம் இருள் சூழ்ந்த எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறது. நாம் நமக்கென வாழும் வழியை வகுத்துக்கொள்ள வேண்டும். கைத் தொழிற் திட்டங்கள் பலவற்றை உருவாக்கி நாட்டின வளம் படுத்த இளைஞர்கள் முயலவேண்டும். இளைஞர்களின் துடிப்பு சமுதாய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது" என்று திரு. கு. வி. செல்வத்துரை புங்குடுதீவு மக்கள் சேவா சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. கு. வி. செல்வத்துரை, உப-தலைவர் திரு. சோ. சுப்பிரமணியம், இணைக்காரியதரிசிகள் திரு மா. இராசலிங்கம், திரு. ஐ. கணேசு, தனதிகாரி. திரு. ம. தம்பிப்பிள்ளை.

ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

—

## மாநகரசபை மின்சாரசுப்பிரிண்டெண்ட்

யாழ்ப்பாணம், புதன்

களனி கிராமசபை மின்சார சுப்ரின்டன்டாகக் கடமையாற்றும் திரு. ஜி. எல். ஜெயவர்த்தன பெப்ரவரிமாதம் 5-ம் திகதி முதல் யாழ்ப்பாண மாநகரசபை மின்சாரப்பகுதி சுப்ரின்டன்டாக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

மின்சார இன்ஜினியர் பதவியை நசுக்கி மின்சார சுப்ரின்டன் என்ற புதிய பதவியை ஏற்படுத்திக் கொள்வதென்ற யாழ்ப்பாண மாநகரசபையின் தீர்மானத்திற்கமையவே இப்புதிய நியமனஞ் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

—

## 'ஆங்கிலம் அவசியம்'

கொழும்பு, திங்கள்

'பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆங்கிலம் மிகவும் அவசியமாகும். பல்கலைக் கழகத்தில் அனுமதி பெறும் மாணவர்கள ஆங்கிலத்தில் அல்லது, வெளிநாட்டு மொழி ஒன்றில் விசேஷ சித்தி பெற்றிருக்க வேண்டும். என்று பல்கலைக்கழக கமிஷன் சிபார்சு செய்யவேண்டும்' என அகில இலங்கை அரசினர் உதவி ஆசிரியர்கள் தொழிற்சங்கம் பல்கலைக்கழக கமிஷனைக் கேட்டுள்ளது.

இங்குள்ள பல்கலைக்கழக வாசிகசாலைகளில் அதிகமாக ஆங்கில புத்தகங்களே இருக்கின்றன என்றும் வெளிநாட்டு மொழி தெரியாத ஒரு மாணவர் பல்கலைக்கழகத்தில் திறமையுடன் கல்வி பயில்லாம் என்று எண்ணுவது தவறு என்றும் சங்கம் பல்கலைக் கழக கமிஷன் தலைவரிடம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக கமிஷனிடம் இச்சங்கம் சமர்ப்பித்துள்ள மகஜரொன்றில் பல நாடுகளிலும் மாணவர்கள் உயர்தரப் படிப்புக்கு வெளிநாட்டு மொழியே முக்கியமாகப் போதிக்கப்படுகிறதென்றும் அநேகமாக இந்த வெளிநாட்டு மொழி ஆங்கிலமாகத்தானிருக்கிறதென்றும் சோவியத் யூனியனிடம் இந்த முறையே கையாளப்படுகிறதென்றும் குறுப்பிட்டுள்ளது.

—

## இசையாசிரியர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

வந்தாறுமூலை அரசினர் மத்திய மகாவித்தியாலயத்தில் இசையாசிரியராகக் கடமையாற்றிய திரு. ஆல்வின் தேவசகாயம் வசாவிளான் அரசினர் மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

## வானொலியில் தமிழ் இலக்கியவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் இலங்கை சாகித்தியமண்டல ஆதரவில் சடந்த இரு தினங்களும் நடைபெற்ற தமிழ்இலக்கியவிழா நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு இலங்கை வானொலி தமிழ் ஒலிபரப்பில் வியாழக்கிழமை இரவு 9-30 மணிக்கு ஒலிரப்பப்படவிருக்கின்றது.

—

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரார்த்தனைக்கு குழந்தைகள் அதிகமாக வருவதின் ரகசியமென்ன தெரியுமா? இதற்குத் தவறாமல் வருபவர்களுக்குப் பரிசுகள் வழங்குகின்றார்களாம்! திருமுறை மனனப் போட்டி வைத்து, அதில் வெற்றிபெற்றவர்களுக்குப்பரிசுகள் வழங்குகிறார்கள். இதில் முஸ்லிம், கிறிஸ்தவக் குழந்தைகளும் சமய வேற்றுமை இன்றி கலந்துகொண்டு, பரிசுகளும் பெறுவதாக, காரியதரிசி அன்பர் கனகசபை தெரிவித்தார். இதைக்கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது. ஆசிரியர் நாராயணதாஸ் இதில் வெகு ஊக்கமெடுக்கிறார்.

* * *

மார்கழி மாதம் முழுவதும் தெரு பஜனை நடத்திய ஜிந்துப்பிட்டி ஸ்ரீ திருஞான சம்பந்த கான சபையினர், சென்ற திங்களன்று காலையிலும், மாலையிலும் பஜனையை மிக விமரிசையாக நடத்தி இரவு சுமார் 2 மணிக்குப் பூர்த்திசெய்தனர். இதில் அன்பர் லட்சுமணன், அண்ணாமலை, இவர்களும், சிறப்பாகக் குழந்தைகளும் வெகு உற்சாகம் காட்டினர். தலைவரும் பிரபல வர்த்தக முதலாளியுமான கணபதியாப்பிள்ளையும் பஜனையில் கலந்துகொண்டு பாடியது குறிப்பிடத்தக்கது. கடைசி இருநாட்களில் மணி பாகவதர், வழக்கம்போல் கலந்துகொண்டு, தம் இன்னிசையால் பலரையும் பரவசப் படுத்தினார்.

தட்டாரத் தெரு பஜனை கோஷ்டியினரும் திங்கள்மாலை 4 மணிக்கு கோவிலிலிருந்து புறப்பட்டு பல வீதிகள் வழியாக பஜனை செய்து இரவு 8 மணிக்குக கோவில் திரும்பினர்.

வழி நெடுக பல இடங்களிலும் அன்பர்கள் இப்பஜனை கோஷ்டிகளுக்கு உபசாரம் செய்து ஆதரவளித்தனர். இந்த பஜனை கோஷ்டிகள், சிறப்பாக குழந்தைகள்மூலம் மேலும் வளருமென்பதற்கான நல்ல அறிகுறிகளைக் காணுகிறேன்.

—

## கல்வி இலாகா வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டச் சங்க சுற்றுப்போட்டியில் கல்வி இலாகா கோஷ்டிக்கும் கடற்படைக் லோஷ்டிக்குமிடையே நடைபெற்ற 'ஏ' பிரிவு ஆட்டத்தில் கல்வி இலாகா 5—2 கோல்களால் கடற்படையைத் தோற்கடித்தது.

திரு. கே. சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

சுகாதார இலாகா, மின்சார இலாகா கோஷ்டிகளுக்கிடையேயான 'பி' பிரிவு ஆட்டத்தில் சுகாதார இலாகாவை மின்சார இலாகா 1—0 கோல்களால் தோற்கடித்தது.

திரு. கே. ஜயபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இந்த இரு ஆட்டங்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றன.

—

யாழ்ப்பாணம், புதன்

நீர்வேலி கிராமசபை 2-ம் வட்டார இடைத்தேர்தல் வாக்கெடுப்பு அடுத்த மாதம் 2-ம்திகதி நடைபெறவிருக்கிறது.

# 3-வது கிரிக்கட் டெஸ்ட்

## அவுஸ்திரேலியா வெற்றி

சிட்னி, ஜன. 15

அவுஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நடைபெற்ற மூன்றாவது கிரிட்கெட் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. பின்னர் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. சிட்னியில் நடைபெற்று இன்றுடன் முடிவடைந்த மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றுள்ளது.

மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 319 ரன்களும் இரண்டாவது இன்னிங்கில் 2 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 67 ரன்களும் எடுத்தது. இங்கிலாந்து,முதல் இன்னிங்சில் 279 ரன்களும் இரண்டாவது இன்னிங்சில் 104 ரன்களும் எடுத்தது.

—

## சம்பளம் தர முடியாது!

### கமிஷனருக்கு மாநகரசபை பதில்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் மாநகரசபைக் கமிஷனராகத் தாம் கடமை புரிந்த காலத்திற்கு சம்பளம் கோரி கமிஷனர் திரு. சண்முகம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

திரு. சண்முகம், குறிப்பிட்ட காலத்தின்போது ஏவெருரு ஆணையாளர் கடமை புரிந்த காரணத்தால் அவருக்கு சம்பளம் வளங்க முடியாதென மாநகரசபை முடிவு செய்துள்ளது.

—

## எச்சரிக்கையாக இருக்க

### தொழிலாளருக்கு உதவிமந்திரி அறிவுரை

கொழும்பு, புதன்

தொழிலாளர் எனப்படுவோர் அரசியல் கட்சிகளை ஆதரிக்க முனையும்போது அக்கட்சித் தலைவர்கள் எனப்படுவோர் அவர்களைத் தங்கள் சொந்த நலன்களுக்காகச் சூறையாடிவிடுகிறார்கள் என்று உதவிச் சுகாதார மந்திரி திரு. ஜே. பி. ஒபயசேகரா இங்கு நடைபெற்ற சுகாதார சிப்பந்திகள் யூனியனின் கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

—

## மானிப்பாய் கி. ச. உபதேர்தல்கள் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் கிராமசபை 13-ம் வட்டார இடைத்தேர்தலில் திரு. செல்லத்துரை சின்னையா 93 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. பொன்னன் சண்முகம் 137 வாக்குகளைப் பெற்றார்.

—

## இன்று ராணுவ சதி வழக்கு

24 பேர் மீதான ராணுவசதி வழக்கு விசாரணை இன்று நீதிபதிகள் திரு. எல். பி. டி' சில்வா, திரு. கிங்ஸ்லி ஹேரத், திரு. ஏ. டபிள்யூ. எச். அபயசுந்தர ஆகியோர் முன்னிலையில் ஆரம்பமாகும். அட்டோர்னி ஜெனரல் திரு. டக்ளஸ் ஜான்ஸ் வழக்கைத் தாக்கல் செய்வார்.

## சிறுவன்மீது மாட்டுவண்டி ஏறியது

புத்தளம், திங்கள்

செட்டிச்சேனை தோட்டத்தைச் சேர்ந்த பேதுரு என்பவரின் மாண்டுவண்டி அவரது ஒன்றரை வயதுக்குழந்தைமீது மோதியதால் மனுவேல் என்ற சிறுவன் படுகாயமுற்று புத்தளம் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

—

## கலாசாலையில் சாகித்திய தினம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கொழும்புத்துறை புனிதவளனார் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சாகித்திய தினவிழா கலாசாலை அதிபர் திரு. எஸ். கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வித்துவான் க. சி. ஞானப்பிரகாசம், பண்டிதர் சு. இராசையா ஆகியோர் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திரு. எஸ். செல்வநாதர் நன்றி கூறினார்.

## இரு கல்லூரிகளுக்..

(1ம் பக்கத தொடர்ச்சி)

லாம்.

இச்சம்பவம் நடைபெற்று சேதத்திற்குள்ளான இரு கல்லூரிகளையும் நேரில் பார்வையிட்டவடபகுதி உதவிவித்தியாதிபதி, வித்தியாதிபதியையும் அமைச்சரையும் நேரில் கண்டு நிலைமையை விளக்கியதாகத் தெரிகிறது. இதனல் இருகல்லூரிகளுக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. உடனடியாகக் கவனிக்கப்படும் வேலைகளுக்கு இத்தொகையைச் செலவு செய்யுமாறு கூறப்பட்டுள்ளதாம்.


### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கண்டிவீதி, அரியாலை வீதிகளுக்கு அணித்தாக, யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்கருகில், கட்டடம் கட்டுவதற்கான $14\frac{1}{2}$ பரப்பு மேட்டுக் காணியும் இக்காணிக்குப் பின்புறமாக 70 பரப்பு செய்கை வயலும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ஜோசப் திருச்செல்வம், 123, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

645

### காணி விற்பனைக்கு

கொக்குவில் ஸ்டேஷனுக்கு அருகாமையில் வீடுகள் கட்டுதற்கேற்ற $6\frac{1}{2}$ பரப்புக் காணி, கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு. வேண்டுவோர் எம்முடன் தொடர்புகொள்க:

இ. சரவணமுத்து, நாயன் மார்கட்டு, யாழ்ப்பாணம்.

646

## இப்பொழுது நடைபெறுகிறது!

## பொங்கல் திரை விருந்து !!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பதுளை)

ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) ஜுபிட்டர் (குருணகலை) லக்ஷ்மி (இரத்தினபுரி)

தீவொளி (நுவரேலியா) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ருகலை)

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்



எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நம்பியார், எம். என். ராஜம்
எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு
எம். எஸ். சரோஜா, மோகனு
மற்றும் பலர் நடித்த

# ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

டைரக்ஷன் டி. யோகானந்த்

### மனோகரா

(யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், பத்மினி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த

### உத்தம புத்திரன்

இன்று மட்டும்
ராணி சம்யுக்தா


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம ஆண்டு ஜனவரி மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.